பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 பங்குனி 17 ஞாயிற்றுக்கிழமை (31-03-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:126

### பாங்கொக் நேரடிப் பேச்சுக்கு முன்பாக

# புலிகள் அமைப்பு மீதான தடை அடுத்த மாதம் நீக்கப்படும்?

## அரசு பரிசீலிக்கின்றது

கொழும்பு,மார்ச்31

**தாய்லாந்தில் ஆரம்பமாகவிருக்கும் நேரடிப் பேச்சுக்களுக்கு முன்னராக விடுதலைப் புலிகள் அமைப்பு மீது உள்நாட்டில் விதிக்கப்பட்டிருக்கும் தடையை தற்காலிகமாக நீக்குவது குறித்து அரச உயர் மட்டத்தில் ஆராயப்பட்டு வருகிறது.**

**இதுதொடர்பான அரசின் அறிவிப்பு ஏப்ரல் மாத இறுதிவாக்கில் வெளியிடப்படலாம் என்று அரச வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.**

பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்பாக புலிகள் மீதான தடையை தற்காலிகமாக நீக்குவதற்கு அல்லது தடை தொடர்பான பிரமாணங்களில் திருத்தங்களைச் செய்வதற்கு அரசு முடிவு செய்திருப்பதாக அறியப்படுகிறது. இது விடயத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்து அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் அதனை நடைமுறைப்படுத்த அரசு தீர்மானித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

உத்தேச நேரடிப் பேச்சுக்கள் மே மாதம் முதல்வாரத்தில் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு முன்பாக புலிகள் மீதான தடை குறித்து அரசு முடிவுகளை எடுக்கும் என்று அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

சமாதானப் பேச்சுக்கான உகந்த

(14ஆம் பக்கம் பார்க்க)

### தொலைபேசிச் சேவை நேற்றிரவு 'அவுட்!'

குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்கும் இடையிலான தொலைபேசிச் சேவை நேற்றிரவு 9.00 மணிமுதல் செயலிழந்திருந்தது.

வறக்காப்பொலவில் உள்ள தொலைத்தொடர்பு நிலையத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே சேவைகள் தடைப்பட்டதாக ரெலிகொம் வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

செய்மதி மூலமான ஒருசில இணைப்புகள் மூலமே பலத்த சிரமத்தின் மத்தியில் அழைப்புகளைப் பெற்றுக்கொள்ளமுடிந்தது.

பெரும்பாலும் இன்று காலை சேவை வழமைக்குத் திரும்பிவிடும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

### போராளிகள் மீது அதிரடிப்படையினர் கெடுபிடி

கொழும்பு,மார்ச்31

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமது பெற்றோரையும் உறவினர்களையும் சந்திக்கச் செல்லும் விடுதலைப் புலி உறுப்பினர்கள் படையினரின் பல்வேறு பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கும் ஆளாகிவருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு இது விடயத்தை பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-

படையினரின் இத்தகைய கெடுபிடிகளால் சாதாரண பொதுமக்களும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழு அலுவலகம் மட்டக்களப்பில் புதனன்று திறப்பு

மட்டக்களப்பு,மார்ச்31

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள நிரந்தர யுத்தநிறுத்தத்தைக் கண்காணிக்கும் சர்வதேச கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம எதிர்வரும் புதன்கிழமை இயங்கவிருக்கின்றது.

நாளைமறுதினம் மட்டக்களப்புக்கு வரும் கணகாணிப்புக் குழுவினர் புதன்கிழமை அலுவலகத்தைத் திறந்து பணிகளை ஆரம்பிக்கவிருககின்றனர்.

கண்காணிப்புக் குழுவுக்கு இதுவரை கிடைத்துள்ள ஐந்து முறைப்பாடுகள் தொடர்பாக இக்குழுவினர் ஆராயவிருக்கின்றனர்.

இதேவேளை -

கண்காணிப்புக் குழுவில் இடம்பெறும் அரச தரப்பின் இரு உறுப்பினர்களும் தமக்கென ஓர் அலுவலகத்தை நகரில் செவ்வாயன்று திறக்கவிருக்கின்றனர்.

கண்காணிப்புக் குழுவில் இடம்பெறும் விடுதலைப் புலிகளின் உறுபபினர்களும் தமது பணிகளை அங்கு ஆரம்பித்துள்ளனர்.

(ஐ-3)

## இன்னும் இரு வாரங்களில் யாழ். அலுவலகம் இயங்கும்

### கோயில் வீதியில் இடம் தெரிவு

யாழ்ப்பாணம்,மார்ச்31

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள நிரந்தர யுத்தநிறுத்தத்தை கண்காணிக்கும் குழுவின் யாழ்.அலுவலகம் இரு வாரங்களில் செயற்படவிருக்கின்றது.

இந்த அலுவலகத்தை திறப்பதற்காக வீடு ஒன்றை யாழ்.நகரில் கோயில் வீதியில் கண்காணிப்புக் குழுவினர் தெரிவுசெய்துள்ளனர்.

அந்த வீட்டின் திருத்தவேலைகள் இரு வாரங்களில் பூர்த்தியடையும் என்றும் -

அதன் பின்னர் அங்கு அலுவலகம் செயற்பட ஆரம்பிக்கும் என்றும்-

தெரிவிக்கப்பட்டது.

இந்த அலுவலகத்துக்கான ஆளணியினரை யாழ். செயலகம் வழங்கவிருக்கின்றது.

(ஐ-3)

## முஸ்லிம்களை அடக்கி ஆள்வது விடுதலைப் புலிகளின் நோக்கமல்ல

### தேவையற்ற பீதி வேண்டாம் என்கிறார் கரிகாலன்

கொழும்பு,மார்ச்31

தமிழினத்தின் விடுதலைக்காகப் போராடி வரும் விடுதலைப் புலிகள் முஸ்லிம் மக்களை ஒருபோதும் அடக்கி ஆளமாட்டார்கள்.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கரிகாலன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு கொக்கட்டிச்சோலையில் உள்ள விடுதலைப் புலிகளின் பிராந்திய அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கரிகாலனைச் சந்தித்து முஸ்லிம் மக்களின் நிலை தொடர்பாக கேட்ட போதே கரிகாலன் இப்படித் தெரிவித்தார்.

முஸ்லிம் மக்கள் தமது மதம், கலாசாரம் அனைத்தையும் பேணி தமக்குரிய தனித்துவத்துடன் வாழ்வதற்கு விடுதலைப் புலிகள் ஒருபோதும் தடையாக இருக்கமாட்டார்கள். இது விடயத்தில் முஸ்லிம்கள் பீதியடையத் தேவையில்லை.

விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் விடுதலையை மட்டுமல்ல முஸ்லிம்களின் நலன்களையும் குறிக்கோள்களாகக் கொண்டவர்கள் என்றும் கரிகாலன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு தொடர்பாக முஸ்லிம்கள் மத்தியில் சந்தேகங்களோ, பீதியோ இருக்குமானால் அவர்கள் அதனை

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் முரண்படவில்லை

### அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்31

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிக்கும் இடையே எந்தவித முரண்பாடுகளும் இல்லை என்று அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அரசுக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையே முறுகல்நிலை தோன்றியுள்ளதாக சில ஊடகங்களில் வெளியான செய்திகளை அடியோடு மறுத்திருக்கிறார் ஹக்கீம்.

கிழக்கு முஸ்லிம்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளைத் தீர்த்து

(14ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய அரசு அமைக்க விரும்பும் எம்.பிக்களோடு ஜனாதிபதி பேசுவார்

கொழும்பு,மார்ச்31

ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் இணைந்து தேசிய அரசு அமைக்கவேண்டும் என்று யோசனை தெரிவித்துள்ள பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பேச்சு நடத்தவுள்ளார்.

இந்தச் சந்திப்பு அடுத்தவாரம் இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தேசிய அரசாங்கம் அமைக்கும் யோசனையை முன்னெடுத்துச் செல்லும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரைச் சந்தித்து பேசியுள்ளதாகவும் -

அதுகுறித்து ஜனாதிபதிக்குத் தகவல் கிடைத்ததை அடுத்தே இந்தச் சந்திப்புக்கு ஜனாதிபதி திட்டமிட்டிருப்பதாகவும் -

கூறப்படுகிறது. (ஐ-6-9)

## முஸ்லிம்களுக்குப் பாதிப்பா? கட்சிகள் கூடி ஆராயும்!

கொழும்பு,மார்ச்31

புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுல்படுத்தப்பட்டு சமாதான முயற்சிகள் நடைபெற்றுவரும் இவ்வேளையில் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் பாதிக்கப்படுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து முஸ்லிம் கட்சிகள் கூடி ஆராயவுள்ளன.

நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் முஸ்லிம் கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கலந்து கொள்ளுமாறு மேற்கு அபிவிருத்தி அமைச்சர் எம்.எச்.முஹமட் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுவதா, இல்லையா என்பது குறித்து ஆராய எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று மாலை கூடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-6-9)

## உறுதிமொழிகளை நம்பி ஏமாந்துபோன கைதிகள்

### உண்ணாவிரதப் போரில் குதிக்க முடிவு

கொழும்பு,மார்ச்31

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை விரைவில் ஆரம்பிக்கப்போவதாக நேற்று அறிவித்துள்ளனர்.

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவருமான அ.விநாயகமூர்த்தி, அமைச்சரும் மலையக மக்கள் முன்னணித் தலைவருமான பெ.சந்திரசேகரன் ஆகியோருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே கைதிகள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

"அரசியல்வாதிகளின் உறுதிமொழிகளை நம்பி நாம் ஏமாந்துவிட்டோம். இனியும் அரசியல்வாதிகளின் உறுதிமொழிகளை ஏற்க நாம் தயாராக இல்லை. எனவே எமது விடுதலைக்காக உண்ணாவிரதப் போரை ஆரம்பிக்கப்போகின்றோம்" என்று அக்கடித்தில் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

அரசியல்வாதிகள் எவரும் இனிமேல் தம்மைப் பார்க்கவரக்கூடாது என்றும் -

கைதிகள் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர். (ஐ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# முறிகண்டியில் பயணிகள் விடுதி இந்து கலாசார அமைச்சு நிறுவும்

யாழ்ப்பாணம்,மார்ச்31

முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் பயணிகள் விடுதி ஒன்றை இந்து கலாசார அமைச்சு அமைக்கவிருக்கின்றது.

தெற்கில் இருந்து வடக்கே வரும் பயணிகள் தங்கி இளைப்பாறி வருவதற்கு வசதியாக ஒரு கோடி ரூபா செலவில் இந்த விடுதி அமைக்கப்படவுள்ளது.

சகல வசதிகளும் கொண்டதாக அமையவிருக்கும் இந்த விடுதியில் நானாவித வசதிகளும் கொண்ட அறைகளும் இளைப்பாறு மண்டபங்களும் கட்டப்படவுள்ளன.

இந்த விடுதியை அமைப்பதற்கான அடிக்கல்லை அடுத்த மாத நடுப்பகுதியில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நடுகை செய்வார்.

இந்த வைபவத்தில் பல அமைச்சர்களும் தென்னிலங்கைப் பிரமுகர்களும் பங்குபற்றவிருக்கின்றனர். (ஐ-3)

# சிறு வர்த்தகர்களுக்கு இலங்கை வங்கி கடன்

யாழ்ப்பாணம்,மார்ச்31

யாழ்.குடாநாட்டில் கடந்த கால வன்செயல்களால் பாதிக்கப்பட்ட சிறு வர்த்தக நிறுவனங்களுக்கு இலங்கை வங்கியினால் கடன் வழங்கும் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

பாதிப்புக்குள்ளான கட்டடங்கள், தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றுக்கு வழங்கப்படவுள்ள இக்கடன் வசதி அவற்றின் உரிமையாளர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை யாழ்.செயலகத்திலோ அல்லது பிரதேச செயலகங்களிலோ பெற்று இந்தக் கடன் திட்டத்துக்கு விண்ணப்பிக்கலாம் என்று 'நான்' தலைவர் யாழ்ப்பாண வணிகர் கழகத்துக்கு அறிவித்துள்ளார். (ஐ-10)

# கோரிக்கைகள் நிறைவேறாவிடில் 2ஆம் திகதிமுதல் உண்ணாவிரதம்

## சிமெந்து நிறுவன தொழிலாளர்கள் அறிவிப்பு

வலிகாமம்தெற்கு,மார்ச்31

தமது ஐந்து அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர்ச்சியான மறியற்போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காங்கேசன்துறை லங்கா சிமெந்து கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தினர் நாளை திங்கட்கிழமைக்குள் சாதகமான பதில் ஏதும் கிடைக்காத பட்சத்தில் ஏப்ரல் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலைமுதல் உண்ணாவிரதம் இருக்கப்போவதாகத் தெரிவித்துள்ளனர்.

இணுவிலில் அமைந்துள்ள லங்கா சிமெந்து நிறுவன தற்காலிகப் பணிமனையில் கடந்த செவ்வாய்க்கிழமைமுதல் தொடர்ச்சியான மறியற்போராட்டத்தை இவர்கள் நடத்தி வருகின்றனர்.

மறியற்போராட்டத்துக்கான காரணங்களைக் கொண்ட சுலோக அட்டைகளைத் தாங்கியபடி காரியாலயத்தின் முன் அமர்ந்து மறியற்போரில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் இத்தொழிலாளர்களின் போராட்ட நிலையை நாடாளுமன்றத்தில் எடுத்துக்கூறி, சாதகமான ஒரு பதிலை ஏப்ரல் முதலாம் திகதிக்குள் பெற்றுத் தருவதாக அறிவித்துள்ளார் என கைத்தொழிலாளர் சங்க செயலாளர் ஏ.முத்துவேல் தெரிவித்துள்ளார். அவரது சாதகமான பதில் திங்கட்கிழமைக்குள் கிடைக்காதுவிடின் மறுநாள் செவ்வாய்க்கிழமையில் இருந்து அனைத்து தொழிலாளர்களும் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ள முடிவுசெய்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை -

தொழிலாளர்களுடைய இப்போராட்டத்தை பல்வேறு அமைப்புகளையும் சார்ந்த பிரமுகர்களும் வருகை தந்து பார்வையிட்டு ஆறுதல்களும், ஆலோசனைகளும் வழங்கி வருகின்றனர்.

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் நேரில் வந்து தொழிலாளர்களுடன் கலந்துரையாடியுள்ளார். தாம் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சின் கவனத்துக்குக் கொண்டுவந்து ஏப்ரல் 3ஆம் திகதி புதன்கிழமைக்குள் சாதகமான பதில் பெற்றுத்தருவதாக அவர் கூறிச் சென்றுள்ளார்.

கடந்த நவம்பர் மாதத்தில் இதே கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்தியபோது முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலையிட்டு 2001ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் ஒக்ரோபர் மாதம் வரைக்குமான தொழிலாளர் சம்பளத்தை வழங்கவும், வரவுப் பதிவேட்டில் கையொப்பமிடவும் அனுமதி பெற்றுக்கொடுத்திருந்தார். ஆனால் கடந்த பொதுத்தேர்தலின் பின்பு 2001 டிசெம்பர் மாதத்தில் இருந்து அந்த அனுமதிகள் லங்கா சிமெந்து நிறுவனப் பொறுப்பதிகாரியால் மறுக்கப்பட்டதைத் தொடர்ந்தே தாம் மீண்டும் தமது போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக தொழிலாளர் சங்கச் செயலாளர் ஏ.முத்துவேல் தெரிவித்தார். (ஐ-152)



மறியற்போரில் ஈடுபட்டுவரும் சிமெந்துத் தொழிலாளர்கள்

# கடற்படையை அரசு நவீனமயப்படுத்தும்

## அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்31

கடற்புலிகளது பலத்திற்கு நிகராக அரச கடற்படையை டிஜிட்டல் முறையில் நவீனமயப்படுத்தப்படும்.

- இவ்வாறு காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன நாடாளுமன்றில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்:-

சமாதானப் பேச்சுக்கள் தொடரும் நிலையிலும் படைப்பலத்தை மேலும் அதிகரிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது. அரச கடற்படையைவிட புலிகளது கடற்படை மிகவும் பலமான நிலையில் உள்ளது. இந்த நிலையில் கடற்படையை மரபு ரீதியான படையாக இனியும் வைத்திருக்கமுடியாது. யுத்தம் இல்லை; சமாதான சூழல் என பாதுகாப்பை உதறிவிட முடியாது. அரச கடற்படையை விட புலிகளது கடற்படை பலம்பெற்றிருப்பதை பார்த்துக்கொண்டு இருக்கமுடியாது. எனவே கடற்படையை எந்த நிலையிலும் தயார் படுத்தி வைத்திருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடற்படையிடம் நவீன கருவிகள் இல்லை, டிஜிட்டல் தொழில்நுட்பம் இணைந்த கருவிகள் இல்லை. அதனால் இவ்வாண்டுமுதல் கடற்படை டிஜிட்டல் முறை மூலம் நவீனமயப் படுத்தப்படும். (ஐ-5)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்31

உடுவில் சிந்து விளையாட்டுக் கழகம், யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3.30 மணி - சண்டிலிப்பாய் சிவசக்தி வி.க. எதிர் கோண்டாவில் மறுமலர்ச்சி வி.க.

★ மாலை 4.30 மணி - உடுவில் ஞானப்பிரகாசர் வி.க. எதிர் இணுவில் அண்ணா வி.க. (ஐ-15)

✪ ✪ ✪

வலிகாமம் தெற்கு மார்ச்31

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட கரப்பந்தாட்டப் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெறும்.

வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ரெஜினா இருதயநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டியில் வலயக் கல்விப் பணிப்பாளர் வீஇராசையா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-152)

✪ ✪ ✪

யாழ்ப்பாணம்,மார்ச்31

யாழ்ப்பாணப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் 15 வயது, 17 வயது பிரிவுகளுக்கிடையில் நடத்தி வரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அரையிறுதி ஆட்டங்கள் நாளையும் நாளைமறுதினமும் இடம்பெறவுள்ளன.

ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

**17 வயதுப் பிரிவு**

★ நாளை சென்பற்றிக்ஸ் கல்லூரி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி(சென். பற்றிக்ஸ் மைதானம்)

★ சென்ஜோண்ஸ் கல்லூரி எதிர் யாழ்.மத்திய கல்லூரி (சென்.ஜோண்ஸ் மைதானம்)

**15 வயதுப் பிரிவு**

★ நாளை மறுதினம் - யாழ். இந்துக் கல்லூரி எதிர் சென். ஜோண்ஸ் கல்லூரி(யாழ்.இந்துக் கல்லூரி மைதானம்)

★ ஹாட்லிக் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி (ஹாட்லி மைதானம்) (ஐ-3)

✪ ✪ ✪

யாழ்ப்பாணம், மார்ச்31

ஈஸ்ரர் தினத்தை முன்னிட்டு பாண்டியன்தாழ்வு தவத்திரு தோமஸ் இளைஞர் மன்றம் வருடாந்தம் நடத்தி வரும் துடுப்பாட்டப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தோமஸ் இளைஞர் மன்ற மைதானத்தில் நடைபெறும்.

இப்போட்டியில் பாண்டியன்தாழ்வுப் பகுதியைச் சேர்ந்த திருமணமான ஆண்களும் திருமணமாகாத இளைஞர்களும் மோதவுள்ளனர். (ஐ-8)

✪ ✪ ✪

யாழ்ப்பாணம்,மார்ச்31

ஆனைக்கோட்டை பாலசுப்ரமணிய வித்தியாலய சிரேஷ்ட மாணவத் தலைவன் கணபதிப்பிள்ளை பிரதீபனின் ஞாபகார்த்தமாக நடைபெற்று வரும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டம் இன்று பிற்பகல் 2.30 மணியளவில் பிரதீப் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகம் ஆகியன இப்போட்டியில் பங்குபற்றுகின்றன. இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறும். (ஐ-5)

## நிவாரண அனுமதிப் பத்திரங்கள்

வடமராட்சிகிழக்கு,மார்ச்31

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் வசித்துவரும் குடும்பங்கள் மார்ச் மாதத்திற்கான உலர் உணவு நிவாரண அனுமதிப் பத்திரங்களை தங்களது நிரந்தர வசிப்பிட கிராம சேவையாளர்களிடம் பெற்றுக் கொள்ளும்படி மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை அறிவித்துள்ளார். (ஐ-182)

## இசை விழாவில் இன்று நடப்பவை

யாழ்ப்பாணம்,மார்ச்31

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் தமது கலாமண்டபத்தில் நடத்திவரும் இசைவிழாவில் இன்று மாலை 3.30 மணிமுதல் ஈழநல்லூர் பி.ரஜீந்திரனின் மங்கள இசை, தயானி அறிவழகனின் வீணை இசை, கே.குகபரன், எஸ்.அபராஜிதன் ஆகியோரின் வயலினிசை, சக்திதேவி சிவகுமார், வி.கே.நடராசா ஆகியோரின் இசைக் கச்சேரிகள் ஆகியன இடம்பெறவிருக்கின்றன. (ஐ-3)

## மரங்கள் சட்டவிரோதமாகத் தறிப்பு

வடமராட்சிகிழக்கு,மார்ச்31

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலிருந்து சவுக்கு, கண்டல் மரங்கள் சட்டவிரோதமாக வெட்டப்பட்டு இரவு நேரத்தில் கடத்தப்படுகின்றன.

மணற்காடுப் பகுதியிலிருந்து சவுக்கு மரமும், குடத்தனை, அம்பன் பகுதியிலிருந்து கண்டல் மரங்களும் வெட்டப்பட்டு சைக்கிள்கள் மற்றும் வாகனங்களிலும் எடுத்துச் செல்லப்படுகின்றன. (ஐ-182)

## காரைக்கால் அம்மையார் குருபூசை

கோப்பாய்,மார்ச்31

புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி இந்து மன்றத்தினரால் அனுஷ்டிக்கப்பட்டுவரும் 63நாயன்மார் குருபூசை வரிசையில் இன்றைய தினம் காரைக்கால் அம்மையார் குருபூசை இடம்பெறவுள்ளது. சைவப்புலவர் க.[illegible] ப்ரார்த்தனை உரையாற்றுவார். (ஐ-72)

# மன்னாரில் இருந்து தனியார் படகுகள் நெடுந்தீவுக்கு சேவை

தென்மராட்சி,மார்ச்31

மன்னார்- குறிகாட்டுவான் பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்த்து மன்னாருக்கு வந்த பொதுமக்களில் சிலர் தனியார் படகுகள் மூலம் நெடுந்தீவுக்கு வந்து அங்கிருந்து யாழ்ப்பாணம் திரும்புகின்றனர்.

மன்னார் - நெடுந்தீவுப் படகுகளில் ஒருவழிக் கட்டணமாக தலா ஆயிரம் ரூபா பயணிகளிடம் இருநது அறவிடப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை 25பேர் மன்னாரிலிருந்து நெடுந்தீவுக்கு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மார்ச்31

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலய சிவகாமசுந்தரி சமேத சிதம்பர நடராஜர் தேவஸ்தான மஹாகும்பாபிஷேகம் இன்று அதிகாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.(ஐ-3)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்31

நாவற்குழி அருள்மிகு பேச்சியம்மன் ஆலய திருக்குளிர்த்தி உற்சவம் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். (ஐ-3)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்31

புனித மரியாள் பேராலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவை முன்னிட்டு யாழ்.ஆயர் அதிவண.தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

இன்று காலை 5.30 மணிக்கு முதலாவது திருப்பலியும் 6.30மணிக்கு ஆயர் தலைமையில் இரண்டாவது திருப்பலியும், 8.30 மணிக்கு மூன்றாவது திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும் என்று ஆலய பங்குத்தந்தை தெரிவித்தார். (ஐ-6-51)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்31

ஈழத்துக் கல்வாரி என்று அழைக்கப்படும் யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் உயிர்த்த ஞாயிறு திருப்பலிகள் இன்று காலை 6.30 மணிக்கும் 8மணிக்கும் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளதாக ஆலய பங்குத் தந்தை தெரிவித்தார். (ஐ-6)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்31

கைதடி, இணுங்கித்தோட்டம் கந்தசுவாமி ஆலயத்தின் சித்திரத் தேர் வடிவமைப்பதற்கான அங்குரார்ப்பண வைபவம் எதிர்வரும் 4ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11.30தொடக்கம் நண்பகல் 12 மணி வரையான சுபவேளையில் இடம்பெறவுள்ளது. (ஐ-10)




வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டு, விளையாட்டுத் துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் திருகோணமலையில் இலக்கிய விழா அண்மையில் இடம்பெற்றது. அந்த விழாவில் 'கலைஞானகேசரி' செல்லையா மெற்றாஸ்மயிலுக்கு ஆளுநர் விருதை மாகாணச்பை பிரதம செயலாளர் கி.கிருஷ்ணமூர்த்தி வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஐ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீர் இந்துக் கோயில் மீது நேற்று தற்கொலைத் தாக்குதல்

ஜம்மு,மார்ச்31
இந்தியாவின் கட்டுப்பாட்டு காஷ்
மீரின் ஜம்முநகரில் உள்ள புராதனப்
புகழ்பெற்ற ரகுநாதர் ஆலயத்தில்
தற்கொலைப் படைத் தீவிரவாதிகள்
நேற்று மேற்கொண்ட தாக்குதலில்
தீவிரவாதிகள் உட்பட 10 பேர் உயி


ஆலயத்தின் முகப்புத் தோற்றம்

ரிழந்தனர். 15இற்கும் மேற்பட்டோர்
இதில் காயமடைந்தனர்.
நேற்று உள்ளூர் நேரப்படி முற்
பகல் 10.30 மணியளவில் ரகுநாதர்
ஆலயம் அமைந்துள்ள கடைப்பகுதிக்
குள் நுழைந்த 4 தீவிரவாதிகள் அங்கி
ருந்த பொதுமக்கள் மீது கண்மூடித்
தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்
தனர். இதனைத் தொடர்ந்து கோயில்
பாதுகாப்புக்காக நின்றிருந்த இந்திய
இராணுவத்தினர் பதில் தாக்குதல்
நடத்தி ஒரு தீவிரவாதியை சுட்டுக்
கொன்றனர்.
இதற்கிடையில் தீவிரவாதிகளில்
ஒருவன் கோயிலுக்குள் நுழைந்து,
படையினர் நால்வரையும், வழிபாட்
டுக்காக வந்திருந்தவர்களில் 5
பேரையும் சுட்டுக்கொன்றான். பின்னா
தனது உடலில் கட்டியிருந்த வெடி
குண்டை வெடிக்க வைத்து இறந்தான்.
இந்த தாக்குதல் சம்பவத்துக்கு
எவரும் நேற்றுமாலைவரை பொறுப்
பேற்கவில்லை. ஆயினும் காஷ்மீர்
தீவிரவாத இயக்கங்களே இதற்குக்
காரணம் இந்தியத் தரப்புக்கள் தெரி
வித்தன.
இதேசமயம் ஜம்மு காஷ்மீரில்
ரசோரி மாவட்டத்தில் அமைந்திருந்த
இந்திய எல்லைப் பாதுகாப்பு படை
யினரின் முகாம் மீது தீவிரவாதிகள்
மேற்கொண்ட தற்கொலைத் தாக்கு
தலில் இரண்டு இந்திய படையினர்
கொல்லப்பட்டனர். மூன்று பேர் காய
மடைந்தனர்.
இந்திய இராணுவத்தின் சீருடை
யுடன் முகாமுக்குள் பிரவேசித்த
இரு தீவிரவாதிகளும் தமது உடலில்
கட்டியிருந்த வெடிகுண்டுகளை
வெடிக்க வைத்து தாக்குதல் நடத்தி
யுள்ளதாகவும் -
அந்தச்சமயத்தில் அருகே இருந்த
மலைப்பகுதியில் பெருமளவு ஆயு
தங்களுடன் மறைந்திருந்த தீவிர
வாதிகளும் முகாம் மீது தாக்குதல்
மேற்கொண்டதாகவும் -
இந்திய இராணுவம் தெரிவித்தது.


சம்பவம் இடம்பெற்ற பகுதியில் சிந்திக் கிடக்கும் இரத்தம்.

# இஸ்ரேலிய படைகளை வாபஸ்பெற ஐ.நா. பாதுகாப்புச் சபை வலியுறுத்து!

நியூயோர்க்,மார்ச்31
இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள பலஸ்
தீனத் தலைமையக வளாகம் மற்றும
பலஸ்தீன கட்டுப்பாட்டுப் பகுதிகள்
அனைத்தில இருந்தும் இஸ்ரேலியத்
துருப்பினர் உடனடியாக வாபஸ் பெறப்
படவேண்டும் என்று ஐ.நா.பாதுகாப்
புச் சபை கோரியுள்ளது.
நேற்று ஐ.நா.தலைமைச் செயல
கத்தில் அவசர அவசரமாகக் கூடிய
பாதுகாப்புச் சபை உறுப்பினர்கள்
மத்திய கிழக்கு நிலைமை குறித்து
ஆராய்ந்தனர்.
அதன் பின்னர், ஆக்கிரமித்துள்ள
பகுதிகளில் இருந்து இஸ்ரேலியப்
படைகள் வாபஸ் பெறப்பட வேண்டும்
என்றும் பாதுகாப்புச் சபை அறிவித்
தது.
சபையில் பிரசன்னமாகியிருந்த
அனைத்து உறுப்பினர்களும் இந்தத்
தீர்மானித்துக்கு ஆதரவாக வாக்க
ளித்தனர். அமெரிக்கப் பிரதிநிதியும்
ஆதரவாக வாக்களித்தார். சிரியா
இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள
வில்லை.
முன்னதாக இந்தப் பிரேரணைக்கு
எதிராகக் கருத்துத் தெரிவித்துவந்த
அமெரிக்கா வெள்ளியன்று பின்னி
ரவில் தனது கருத்தை மாற்றிக்
கொண்டு தீர்மானத்தை ஆதரித்தது.
"தீவிரவாதிகள் இஸ்ரேலியப்
பொதுமக்கள் மீது தாக்குதல்களை
நடத்தியதால் ஏற்பட்ட அனுதாபத்தை
தனது இராணுவ நடவடிக்கை மூலம்
இஸ்ரேல் கெடுத்துவிட்டது" - என்று
தெரிவித்தார் அமெரிக்க வெளிவிவ
காரச் செயலர் கொலின் பவல்.
இஸ்ரேலும் பலஸ்தீனமும் அர்த்த
முள்ள ஒரு யுத்தநிறுத்தத்தை மிக
விரைவில். செய்து கொள்ளவேண்
டும் என்று பாதுகாப்புச் சபை தீர்மா
னத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இஸ்ரேலியர்களுக்கு எதிரான
தற்கொலைத் தாக்குதல்களும் பலஸ்
தீன அதிகாரசபைக்கு எதிரான இரா
ணுவ நடவடிக்கைகளும் உடனடி
யாக நிறுத்தப்பட வேண்டும் என்று
அது கேட்டுள்ளது. (ம)

ஐ.நா.பாதுகாப்புச் சபைக் கூட்டம் நடைபெறுகின்றது


## குஜராத்தில் நில நடுக்கம்

அஹமதாபாத்,மார்ச்31
இந்தியாவின் குஜராத் மாநிலம்
ராணாகஞ்ச் வளைகுடாப் பகுதியில்
நேற்றுப் பிற்பகல் 11.50 மணியளவில
நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர்
அளவுகோலில் 4.3 என்ற அளவில்
பதிவாகியிருந்தது இந்த நிலநடுக்கத்
தினால் சேதங்கள் ஏற்பட்டதாகத் தக
வல்கள் இல்லை. (ஒ)

# நான் கொல்லப்பட்டாலும் கூட சுதந்திரத் தாய்நாட்டுக்கான போராட்டத்தை கைவிடாதீர்

## பலஸ்தீனர்களுக்கு அரபாத் அறைகூவல்

லண்டன்,மார்ச்31
இஸ்ரேலியர்களின் தாக்குதல்
என்னைத் தியாகி ஆக்கினாலும்
சுதந்திர நாட்டுக்கான போராட்டத்
தைக் கைவிடாதீர்கள்.
- இவ்வாறு பலஸ்தீனத் தலைவர்
யஸீர் அரபாத் தனது மக்களுக்கு
அறைகூவல் விடுத்துள்ளார்.
பலஸ்தீனத் தலைமையகத்தின்
மீது இஸ்ரேலிய இராணுவம் தாக்
குதலை மேற்கொண்டிருந்தபோது
பின்னணியில் வெடியோசைகளுடன்
சி.என்.என். தொலைக்காட்சிக்கு
தொலைபேசி மூலம் அளித்த பேட்டி
யிலேயே அரபாத் இந்த அறைகூவலை
விடுத்தார்.
'அவர்கள் தொடர்ந்து எம் மீது
'ஷெல்' வீசிக்கொண்டிருக்கிறார்கள்.
ஒருவேளை நான் இந்தக் கணமே
உயிரிழக்கக்கூடும். ஆனால் பலஸ்
தீனர்கள் தமது தாயகப் போராட்
டத்தை ஒருபோதும் கைவிடமாட்டார்
கள்' என்று அரபாத் அப்போது கூறி
னார்.
இதற்கிடையில், மேற்குக்கரை
ரமழா நகரில் உள்ள பலஸ்தீனத்
தலைமையகம் முற்றாக தமது கட்
டுப்பாட்டில் வந்துள்ளதாகவும் -
தம்மால் யஸீர் அரபாத் முடக்கப்
பட்டுவிட்டதாகவும் -
இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்
துள்ளது.
நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்
பட்ட இராணுவ நடவடிக்கை மூலம்
பலஸ்தீனத் தலைவர் யஸீர் அர
பாத் முடக்கப்பட்டுவிட்டதாகவும் -
அவர் தனது அதிகாரங்களை
பயன்படுத்துவது தடுக்கப்பட்டுள்ளதா
கவும் -
அங்கிருந்து வரும் செய்திகள்
தெரிவிக்கின்றன.
பலஸ்தீனத் தலைமையகம்
மீதான நடவடிக்கையின் போது அர
பாத்தின் மெய்ப்பாதுகாவலர் உட்பட
ஐந்து பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.
சுமார் 50பேர் இஸ்ரேலியப் படை
யினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.
பலஸ்தீன பாதுகாப்பு அதிகாரிகள்
நடத்திய பதில் தாக்குதலில் இரண்டு
இஸ்ரேலியப் படையினர் கொல்லப்
பட்டனர்.
ஒரு கட்டத்தில் அரபாத்தின் அலு
வலக அறைக்குள் பிரவேசித்த இஸ்
ரேலியப் படையினர் தற்போது அங்கி
ருந்து வெளியேறி பலஸ்தீன தலை
மையகக் கட்டடத்தை முற்றுகையிட்
டுள்ளனர்.
இதேசமயம் அரபாத்தின் அலுவ
லகம் மீது இஸ்ரேல் மேற்கொண்ட
இராணுவ நடவடிக்கையை பல நாடு
களும் கண்டித்துள்ளன.
இந்தக் கண்டனங்கள் குறித்துக்
கருத்துத் தெரிவித்த பலஸ்தீனத்
தரப்பு மேற்குநாடுகளின் கண்டனங்கள்
வெறும் வாய்ப்பேச்சே தவிர, இஸ்
ரேலின் அராஜகங்களை தடுக்கும்
எண்ணம் அவற்றுக்குக் கிடையாது
என்று கூறியது. பலஸ்தீனத் தலை
வர் யஸீர் அரபாத்தின் உயிருக்கு
ஆபத்து நேர்ந்தால் அதுவே இஸ்
ரேலின் தலையாய தவறாக இருக்கும்
என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.
(ஒ)

# அதிகளவுநேரம் ரி.வி. பார்க்கும் சிறுவருக்கு வன்முறையில் ஈடுபாடு

## அமெரிக்க ஆய்வு தெரிவிப்பு

வாஷிங்ரன்,மார்ச்31
தினமும் ஒரு மணித்தியாலம் அல்
லது அதற்குமேல் தொலைக்காட்சி
நிகழ்ச்சிகளைப் பார்க்கும் சிறுவர்கள்
ஆக்ரோஷத்துடனும், வன்முறையின்
மேல் ஈடுபாட்டுடனும் இருப்பதாக சமீ
பத்திய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.
அமெரிக்காவின் கொலம்பியா
பல்கலைக்கழக பேராசிரியர் ஜஸ்வின்
ஜோன்சன் மனநல மையம் ஒன்று
டன் மேற்கொண்ட இந்த ஆய்வில்
சுமார் 700 சிறுவர்கள் ஆய்வுக்குட்
படுத்தப்பட்டனர்.
தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில்
கொடூரம், பயங்கரம் ஆகியவற்றைப்
பிரதிபலிக்கும் வன்முறைக் காட்சி
கள் அடங்கிய நிகழ்ச்சிகளை தடை
செய்யவேண்டும் என்று அமெரிக்
காவில் குரல் எழுப்பி வருவோருக்கு
இந்த ஆய்வின் முடிவு வலுச்சேர்ப்
பதாகக் கூறப்படுகிறது.
இதேசமயம், ஆசியநாடுகளின்
தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பெரும
பாலும் பாலியல் இச்சையைத் தூண்டு
வனவாக அமைந்துள்ளதாகக் கூறப்
படுவது குறிப்பிடத்தக்கது. (ஒ-8)

# நிலக்கரிச் சுரங்கம் வெடித்து சீனாவில் 21 பேர் உயிரிழப்பு!

சீனாவில் நிலக்கரிச் சுரங்கமொன்
றில் நிகழ்ந்த வெடிப்பில் 21 சுரங்
கப் பணியாளர்கள் கொல்லப்பட்டனர்.
மத்திய ஹினாவ் மாகாணத்தில்
ஹிங்கோம் நகரின் அருகேயுள்ள
ஜிவ்சென் நிலக்கரிச் 'சுரங்கத்தில்
நேற்றுமுன்தினம் காலை இந்த விபத்து
நேர்ந்துள்ளதாக சீன அரசின் செய்தி
நிறுவனம் அறிவித்தது.
நிலக்கரிச் சுரங்கத்துக்கு உட்
பகுதியில் தட்பவெப்ப நிலை, பாது
காப்பு அளவுக்கும் அதிகமாகத் திடீ
ரென்று உயர்ந்ததால் இந்த வெடிப்
புச்சம்பவம் ஏற்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் நிகழ்ந்தபோது
33 சுரங்கப் பணியாளர்கள் இருந்த
தாகவும் -
அவர்களில் 12பேர் காப்பாற்றப்
பட்டதாகவும் -
மற்றைய 21 பேரும் சுரங்க இடி
பாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்து
விட்டதாக அஞ்சப்படுவதாகவும் -
சுரங்க நிர்வாக அதிகாரி ஒரு
வர் தெரிவித்தார். சீனாவில் உள்ள
நிலக்கரிச் சுரங்கங்களில் விபத்
துக்கள் நிகழ்வதும், அவற்றால்
கணிசமான எண்ணிக்கையில் உயி
ரிழப்புக்கள் ஏற்படுவதும் வழக்கமாக
நடைபெறும் நிகழ்வுகளாகிவிட்டன.
சீனாவில் கடந்த ஆண்டில் மட்
டும் நிலக்கரிச் சுரங்க விபத்துக்களில்
சுமார் 5 ஆயிரம் பேர் கொல்லப்
பட்டதாக அதிகாரபூர்வ புள்ளி விவ
ரங்கள் தெரிவிக்கின்றன. (ஒ-8)

# தற்கொலைத் தாக்குதலில் 2 இஸ்ரேலியர்கள் மரணம்!

ஜெருசலேம்,மார்ச்31
பலஸ்தீனத் தலைவர் யஸீர் அர
பாத்தின் மேற்குக்கரைத் தலைமை
யகம் மீது இஸ்ரேலியப் படைகள் தாக
குதலைத் ஆரம்பித்த நேற்றுமுன்
தினம், 16வயதான பலஸ்தீனப் பெண்
தற்கொலைத் தாக்குதலாளியின்
தாக்குதலில் இரு இஸ்ரேலியர்கள்
கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்
தில் 20 பேர் வரை காயமடைந்தனர்.
மேற்கு ஜெருசலேம் அருகே கிர்
யாட்யோவல் என்ற இடத்தில் உள்ள
வர்த்தகமையம் ஒன்றினுள் நுழைந்த
பலஸ்தீனப் பெண் தீவிரவாதி வெடி
குண்டை வெடிக்க வைத்து உயிரிழந்
தார். இதில் இரு இஸ்ரேலியர்களும்
பலியாகினர்.
யஸீர் அரபாத்தின் பதாஹ் இயக்கத்
துடன் இணைந்த [illegible]
[illegible] இத்தாக்குதலுக்
குப் பொறுப்பேற்றுள்ளனர்.
(ஒ)

# இந்து – இஸ்லாமிய கலவரம் குஜராத்தில் தொடர்கிறது!

இந்தியாவின் குஜராத் மாநிலத்
தில் வன்முறைச் சம்பவங்கள் தொடர்
கின்றன. சபர்பதி விரைவு ரயில் தீயிடப்
பட்ட சம்பவத்தில் அதில் பயணித்த
கடும்போக்கு இந்துத்துவ அமைப்பின
தொண்டர்கள் இறந்ததையடுத்து
அங்கு மூண்ட கலவரங்கள் மாநிலத
தலைநகர் அஹமதாபாத்தில் ஓய்ந்து
விட்டபோதிலும், மாநிலத்தின் பிற
பகுதிகளில் தற்போதும் வன்முறைச்
சம்பவங்கள் தொடர்ந்து கொண்டிருக்
கின்றன.
காதிநகர், அனந்தநாக் மாவட்டத்
தின் அசாதாக், லோஹால், காம்பால்
ஆகிய இடங்களிலும் நேற்றுமுன்தினம்
வன்முறைச் சம்பவங்கள் மூண்டன.
இந்த இடங்களில் வன்முறையைக்
கட்டுப்படுத்த பொலீஸார் துப்பாக்
கிப் பிரயோகம் செய்ததாகவும் -
அசாதாக் நகரில் கலவரக்காரர்
கள் துப்பாக்கியால் சுட்டதாகவும் -
கூறப்படுகிறது.
இதே இடத்தில் கல்வீச்சுச் சம்
பவமொன்றில் 10 பொலீஸ் அதி
காரிகள் காயமடைந்தனர். லோஹாலில்
புகையிலைத் தொழிற்சாலை ஒன்
றுக்குக் கலவரக் கும்பல் தீயிட்டது.
காதிநகரில் இந்துக்களும் முஸ்
லிம்களும் பரஸ்பரம் கல்வீசித்தாக்
கிக் கொண்டனர்.
கலவரத்தை அடக்க இராணுவம்
பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.(ஒ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் வருட நினைவஞ்சலி

மண்ணில்
11
-
01
-
1976



விண்ணில்
10
-
04
-
2001

## செல்வன் வைத்திலிங்கம் அருட்சுதன்

திதி:31. 03. 2002

நீர்க்குமிழி வாழ்க்கையை நிஜமென்று நம்பினோமே தம்பி!
நீர்க்குமிழி வாழ்க்கைதான் நிச்சயமென்று காட்டி விட்டு
சென்று விட்டீரே தம்பி!
ஆண்டொன்று சென்றாலும் ஆறுமோ தம்பி எம் துயரம்?

*அராலி தெற்கு,*
*அராலி.*

*பிரிவால் வாடும்:*
குடும்பத்தினர்.

(2288)

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!

## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் — முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்





அமரர் முத்துச்சாமி செல்வமணியம் — திருமதி நாகரத்தினம் செல்வமணியம்

05.05.1918 ← இவ்வுலக வாழ்வு → 12.02.1927
15.03.2002 ← இறைவனடி → 26.04.2001

எமது அன்புத் தந்தையார் அமரர் முத்துச்சாமி செல்வமணியம் அவர்களின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டு எம்முடன் அனுதாபங்களைப் பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் நாம் நன்றியறிதலைத் தெரிவிப்பதோடு நாளை (01. 04. 2002) திங்கட்கிழமை எமது இல்லத்தில் அன்னார்களின் நினைவாக நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

*122/5, ஆனைப்பந்தி ஒழுங்கை,*
*பருத்தித்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*பிரிவால் துயருறும்:-*
- குடும்பத்தினர்.

(2282)

# ஓராண்டு நீங்காத நினைவலைகள்

தாயக
மண்ணில்
மலர்வு
26
-
05
-
1923



அந்நிய
மண்ணில்
உதிர்வு
10
-
04
-
2001

## அமரர் செல்லத்துரை தவவிநாயகம்

*(அல்லைப்பிட்டி முன்னாள் கிராமத் தலைவர், கிராமசபைத் தலைவர், சமாதான நீதிவான்.)*

திதி:31.03.2002

சென்ற ஆண்டு சித்திரைத் திங்கள் தேதி பத்தில்
சேர்ந்த அபரபக்க திருதியைத் திதியில்
உயிர் நீத்த எம் தந்தையே!
நிறை செல்வன் தவவிநாயகனே!
பொன்றுளார் சோமான் அடியில்
பொருந்தவே நின்று! பொழுதெல்லாம்
எம்மை வருந்தவிட்டு எங்கு சென்றீர்கள்?
இன்றுடன் ஓராண்டு ஆகிவிட்ட போதிலும்
நாம் என்றும் உம்மை நினைத்து வருந்துகின்றோம்.

*குமார் சொப்,*
*பிரான்ஸ்.*
(C/21382)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## நிவாரண 'பெர்மிட்' விநியோகம்

தென்மராட்சி,மார்ச்31

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ள பச்சிலைப் பள்ளி பிரதேசத்தைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மக்களுக்கான மார்ச் மாதத்திற்குரிய நிவாரண 'பெர்மிட்'டுகள் அந்தந்தக் கிராம அலுவலர்களால் கடந்த புதன்கிழமை முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஒன்றரை வருடங்களாக பளைப் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட நிவாரணப் 'பெர்மிட்'டுகள் இம்முறை பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் நிவாரண உலர் உணவுப் பொருள்கள் வழங்கும் பணிகள் பளை ப.நோ.கூ. சங்கத்திலிருந்து புலோலி ப.நோ.கூ. சங்கத்தின் கிளைக் கடைகள் ஊடாக வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-117)

ஸ்பெஷல்
குங்குமப்பூ மஸ்ரூம் புரியாணி
ரூபா 150 (சிக்கன்) ரூபா 150
ஜோ.எகட்டனின்
ஜெசித்தாரா
உங்கள் விருந்தகம்
19/3, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(2301)



உ
சிவமயம்

## ஷஷ்டி அப்தபூர்த்தி விழா

அன்புடையீர்!

யாழ்ப்பாணம் மல்லாகம் பழம்பிள்ளையார் கோயில் பிரதம குரு சிவஸ்ரீ S.முத்தையாக்குருக்கள் – ராஜராஜேஸ்வரி தம்பதிகளின் மகனும் வெங்கட்ராமஐயர் பார்வதி அம்மாளின் கணவரும் எமது பிதாவுமாகிய

**சிவஸ்ரீ மு.இரத்தினசாமிக்குருக்கள்** அவர்களின்

ஷஷ்டி அப்தபூர்த்தி விழா நிகழும் மங்களகரமான விஷு வருஷம் பங்குனி மாதம் 18ஆம் திகதி நாளை (01.04.2002) திங்கட்கிழமை அனுஷ நட்சத்திரமும் சதுர்த்தித்திதியும் சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் காலை 7.00 மணிமுதல நடைபெறும் என்பதை அன்புடன் அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

*விழா நடைபெறும் இடம்* : மோடி ஹோல்
விவேகானந்த மேடு, கொழும்பு - 13.

ஷஷ்டி அப்தபூர்த்தி விழா ஆசாரியர்
சைவசித்தாந்த பிரதிஷ்டா சக்கரவர்த்தி
**சிவஸ்ரீ சி.குஞ்சிதபாதக்குருக்கள்**
பிரதம குரு
(ஸ்ரீ சிவகாமி அம்பா சமேத ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்)
கொழும்பு - 13.

இங்ஙனம்:

*106, அல்விஸ்வத்தை,*
*ஏகித்தை, வத்தளை.*
T.P: No.: 075-350996,
077-520789

பிள்ளைகள்: R.பிரபாகரசர்மா,
R.வைத்தீஸ்வரசர்மா – ராஜேஸ்வரி தம்பதிகள் (Denmark),
M.சந்ரமோகன்சர்மா – ராஜலக்ஷ்மி தம்பதிகள் (Landon).

(2309)

## விற்பனைக்கு


சுன்னாகம் சந்திக்கு அருகாக கே.கே.எஸ். வீதியில் மூன்று கடைகள் விற்பனைக்கு உண்டு. இதில் ஒரு கடை தளபாடம், பொருள்களுடன் உண்டு. சுன்னாகம் தெற்கு, பூதராயர் வீதி யில் காணியும் விற்பனைக்கு உண்டு.

(கோயிலுக்கு அருகாக)

தொடர்பு:- சேது விபுலானந்தா,
207, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

(2290)

# முதலாம் வருட நினைவஞ்சலி



## அமரர் பொன்னையா வாதவூரன்

*(Ret. - chief Clerk, Railway Department)*

அன்னை மடியில்
09.05.1925

ஆண்டவன் அடியில்
31.03.2001

திதி: சப்தமி 04.04.2002

அன்பின் சிகரமாய், பண்பின் உறைவிடமாய்,
பாசத்திற்கு இலக்கணமாய் இருந்து எம்மையெல்லாம் வழிநடத்தி
வாழ்ந்து காட்டிய அன்புத்தெய்வமே! அருமை அண்ணாவே! நீங்கள்
எம்மைவிட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உம் நினைவுகள்
எம்மைவிட்டு என்றென்றும் பிரியாது!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*சிவசக்தி கோயிலடி,*
*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.*

(2271)

தங்கள் பிரிவால் துயருறும்:
*அன்புச் சகோதரி*
திருமதி கௌரி நாகேந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## விலகிப் போகிறது இந்தியா!

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நேரடிப் பேச்சுக்கள் தாய்லாந்து மண்ணிலேயே நடத்தப்படும் என்று முடிவாகி இருக்கிறது.

புலிகள் தரப்பும் அரசும் தாங்கள் ஒருவரை ஒருவர் முகம் எதிரே சந்தித்துப் பேசும் இடமாக இந்த தென்கிழக்கு ஆசிய நாட்டை ஏற்றுக்கொண்டுவிட்டனர்.

விடுதலைப் புலிகள் தரப்பு விரும்பியதுபோல் சமாதானப் பேச்சுக்கள் நடத்தப்படும் இடமாக இந்தியா அமையவில்லை. புலிகளின் கோரிக்கையை உத்தியோகபூர்வமானதாகவோ அன்றி முக்கியத்துவம் வாய்ந்ததாகவோ காட்டிக்கொள்ளக்கூடாது என்பதில கடைசி நிமிடம் வரை கண்ணும் கருத்துமாக இருந்த பாரதீய ஜனதா அரசு ஒருவாறு இந்த விவகாரத்தில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்டுவிட்டது.

இந்தியாவுடன் கசப்புணர்வு இருந்தாலும் கூட இந்தப் பிராந்தியத்தில் இந்தியாவின் வல்லாதிக்கத்துக்கும் பிரதேச அமைதியில் இந்தியாவுக்குள்ள முக்கியத்துவம், பொறுப்பு ஆகியனவற்றுக்கும் மதிப்பளிக்கும் விதத்தில் -

யாரும் எதிர்பாராத வகையில் -

உத்தேச சமாதானப் பேச்சுக்களை நோர்வேயின் உதவியுடன் தென்னிந்திய நகரம் ஒன்றில் நடத்துவதையே தாங்கள் விரும்புகின்றனர் என்று சமாதான ஏற்பாட்டாளர்களான நோர்வே ஊடாக இந்தியத் தரப்புக்கும் இலங்கைத் தரப்புக்கும் புலிகள் தெரியப்படுத்தினர்.

இந்தியாவின் பங்களிப்பின்றி வெளியில் இருந்து வரும் நோர்வே போன்ற நாடுகளின் ஏற்பாட்டில் நடத்தப்படும் சமாதானப் பேச்சுக்கள் பயன்தரமாட்டா என்ற அச்சத்தை நீக்கி - இலங்கையில் சமாதானம் நிலைபெறுவதில் இந்தியாவுக்குள்ள பங்களிப்பின் முக்கியத்துவத்தை வெளிக்காட்ட ஒரு சந்தர்ப்பம் வழங்கும் வகையில் -

இந்திய நகரம் ஒன்றில் பேச்சு நடத்தும் விருப்பத்தைப் புலிகள் கொண்டிருந்தனர்.

இந்தியாவை ஓர் எதிரி சக்தியாக அன்றி நட்புறவு சக்தியாகவே தமிழர்களும் தாங்களும் கருதுகின்றனர் என்பதை உணர்த்தவும் புலிகள் இதன் மூலம் முயன்றனர்.

ஆனால் இது விடயத்தில் இந்தியா காட்டிய நீண்ட மௌனம் இலங்கையின் சமாதான முயற்சிகளில் இந்தியாவுக்குள்ள பொறுப்பை, தார்மீகக் கடப்பாட்டை அர்த்தமிழக்கச் செய்துள்ளது.

நோர்வே அரசின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுக்கள் இலங்கையின் இருண்ட யுகத்துக்கு ஒரு முடிவைக் கொண்டுவரும் என்ற நம்பிக்கை முன்னர் ஒருபோதும் இருந்திராத அளவுக்கு வலுப்பெற்றுள்ளது.

இந்த வரலாற்று நிகழ்வுக்கான சந்திப்புக்கள் ஈழத்தமிழர்களோடு தொப்புள்கொடி உறவுள்ள தமிழக மண்ணில் நடைபெற்றிருப்பின் அது ஈழத்தமிழர்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கும் என்பது வெளிப்படை. ஆனால் இந்த விவகாரத்தில் இருந்து இந்திய அரசு நழுவிக் கொண்டது.

சமாதானப் பேச்சுக்கான ஏற்பாடுகள் பற்றி தலைவர் பிரபாகரனோடு ஆலோசனை நடத்துவதற்காக எவ்வளவோ சிரமங்களின் மத்தியிலும் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வெளிநாட்டு விமானம் ஒன்றில் வன்னி போய்ச் சேர்ந்திருக்கிறார்.

ஆனால் அவரது இலங்கை விஜயம் தனது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைவதுபோல இந்தியா காட்டிக்கொள்கிறது?

பாலசிங்கத்தின் வன்னி வருகையை அடுத்து இந்தியக் கடற்படை தனது கரையோரக் காவல் பணியை உஷார்ப்படுத்தியிருப்பதாக சில இந்திய இணையச் செய்தித் தளங்களில் வெளியாகி இருக்கும் செய்தி சமாதான ஆர்வலர்களைக் கவலைகொள்ளச் செய்துள்ளது.

தனது நாட்டின் பாதுகாப்பை உறுதிசெய்யும் பொறுப்பும் கடமையும் இந்திய அரசுக்கு உரியது. எனினும் இதுபோன்ற செய்திகள், தகவல்களை இந்தியத் தரப்பு இந்தக் கட்டத்தில் வெளியிடுவது ஏன்?

இவற்றின் உள்நோக்கம் என்ன என்பன போன்ற ஐயங்கள் தமிழ்மக்கள் மனங்களில் எழவே செய்கின்றன.

எது எவ்வாறாயினும் அடுத்துவரும் மாதங்களில் எப்படியோ சமாதானப் பேச்சுக்கள் தொடங்கத்தான் போகின்றன.

அந்தப் பேச்சுக்களுக்கு இந்தியா தனது உறுதியான ஆதரவை வழங்கும் என்று அனைவருமே எதிர்பார்க்கின்றனர்.

இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் பங்களிப்பு அவசியமற்றது; எதிர்காலத்தில் இது விடயத்தில் இந்தியத் தலையீடு ஏற்கமுடியாதது என்ற நிலைமை உருவாகாமல் இருப்பதை உறுதிசெய்ய இந்தியாவுக்கு இன்னமும் சந்தர்ப்பங்கள் உள்ளன.

இந்திய அரசும், அரசியல் கட்சிகளும் இதனை மேலும் ஒருகடவை சிந்தித்துப் பரிசீலித்து உணர்ந்து கொள்வதற்கான காலப்பகுதியாக இந்த வரலாற்றுக் காலகட்டம் அமைகிறது.

# யாழ்.குடாநாட்டுக் கல்லூரிகளுடன் கொழும்பு றோயல் கிரிக்கெட் போட்டி

## ஏப்ரல் மாதம் அளவில் நடைபெறும்

கொழும்பு றோயல்கல்லூரிக்கும் யாழ்ப்பாணத்தின் முன்னணி கல்லூரிகளான சென். ஜோன்ஸ் கல்லூரி, சென்.பற்றிக்ஸ், மத்திய கல்லூரி ஆகியனவற்றுக்கும் இடையில் கிரிக்கெட் போட்டிகளை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகிறார்.

மேற்படி யாழ்.கல்லூரிகளுடன் போட்டியிடுவதற்கான தமது விருப்பத்தை றோயல் கல்லூரி அதிபர் ஏற்கனவே அமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன யாழ். அரசாங்க அதிபருக்கு விடுத்த கோரிக்கையில் - மேற்படி யாழ். பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் கிரிக்கெட் அமைப்புகளுடன் தொடர்புகொண்டு ஏப்ரல் மாதத்தில் இப்போட்டிகளை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்து தருமாறு கேட்டுள்ளார்.

கொழும்பு - யாழ்ப்பாண பாடசாலைகளுக்கிடையே புரிந்துணர்வு, நல்லிணக்கம் என்பவற்றை ஏற்படுத்தும் முகமாக அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன இந்தக் கிரிக்கெட் போட்டிகளை ஏற்பாடு செய்துள்ளார். (ஐ)

## நாட்டு நடப்பு

### நவீன பத்தடியார் IV

**மது**

கசிப்பது உடலைக் கொல்லும்
கண்ணதில் பார்வை போக்கும்
பசியின்றி உடல் மெலியும்
படுக்கையில் கிடத்தி விடும்
ஊசியால் குத்தி ஈரல்
ஊறலை உறுஞ்ச வைக்கும்
நாசியில் குழலை மாட்டி
நயம்பெற மூச்செடுக்க வைக்கும்
"ஏசி"யில் வைக்கும் போது
இயமனார் கூட்டிச் செல்வார்.

*- விகடகவி*

# தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் ஊடகத்துறை மதிப்புப் பெற்றுள்ளது

## வரதரின் பவளவிழாவில் துணைவேந்தர் உரை

நல்லூர்,மார்ச்31

தகவல் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துள்ளதால் பத்திரிகைத்துறையும் இலத்திரனியல் ஊடகத்துறையும் மதிப்பும் மரியாதையும் பெற்ற துறைகளாக இன்று விளங்குகின்றன.

- இவ்வாறு யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

மூத்த எழுத்தாளரும் பிரசுரகர்த்தாவுமான வரதரின் பவளவிழா கலாநிதி க.குணராசா தலைமையில் நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெற்றது. யாழ்.இலக்கிய வட்டத்தின் சார்பில் நடைபெற்ற இவ்விழாவில் வரதருக்குப் பொன்னாடை போர்த்துக் கௌரவித்த துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

'நாட்டின் நிலைமைகளை, அரசியல் உறுதிப்பாட்டை, பொருளாதார வளங்களை எழுதக் கூடிய, விமர்சிக்கக் கூடிய ஆற்றலைக் கொண்டவர்களாக ஊடகத்துறையினர் விளங்குவதால் அரசும் இவர்களுக்குத் தனியான கௌரவத்தை அளிக்கிறது.

யாழ்ப்பாணத்தில் இருந்து மூன்று பத்திரிகைகள் வெளிவருகின்றன. இது பிரசுரத்துறையின் வளர்ச்சிக்கு எடுத்துக் காட்டாகும். மேலும் பல பத்திரிகைகள் வந்தாலும் கூட மக்கள் அவற்றிற்கு ஆதரவு வழங்கக் காத்திருக்கின்றார்கள். வலிமைமிக்க இத்துறையில் அனுபவம் மிக்க எழுத்தாளரான வரதர் தனது அனுபவத்தையும் ஆற்றலையும் இளம் தலைமுறையினருடன் பகிர்ந்து கொண்டு இத்துறையின் வளர்ச்சிக்குக் கைகொடுக்க வேண்டும்' - என்றார்.

கலாநிதி குணராசா தனது தலைமையுரையில் -

'மறுமலர்ச்சியுகத்தை உருவாக்கி அதில் வெற்றிகண்ட வரதர் அறுபது வருடங்களாக - நல்ல எழுத்தாளராக - வெளியீட்டாளராக - தொழிலில் ஆர்வம் மிக்கவராக வாழ்ந்து காட்டியவர். தனது 14 வயதிலேயே எழுத ஆரம்பித்த அவர் ஈழகேசரியில் தனது திறமைகளை வெளிப்படுத்தினர்' - என்றார்.

கலாநிதி க.சொக்கலிங்கம் (சொக்கன்) பேசும்போது கூறியதாவது -

'இருபத்தி நான்கு வெளியீட்டுத் துறைகளில் சாதனை நிலை நாட்டிய வரதருடன் ஒரே வயதில் வாழும் பாக்கியம் பெற்றுள்ளேன். இன்றும் கூட தனக்குக் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியை எழுத்தாளர்களின் நலனுக்காகச் செலவு செய்துவரும வரதர் எழுத்தாளர்களின் நலனுக்கே வாழும் ஒருவர் என்ற வகையில் யாழ்.இலக்கிய வட்டம் அவருக்குப் பவளவிழா எடுப்பது பாராட்டுக்குரியது' - என்றார்.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா பவளவிழா நினைவு மலரை வெளியிட்டு உரையாற்றினார். முதல் பிரதியை நல்லூர்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.காங்கேயன் பெற்றுக்கொண்டார்.

விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள், மாவை ஆதீன மகாராஜ ஸ்ரீ சண்முகநாதக் குருக்கள் ஆகியோர் வரதருக்கு பொன்னாடை போர்த்து அருளாசி வழங்கினார்கள். (ஒ-111)

### நாளை

பங்குனி 18
திங்கட்கிழமை
(01.04.2002)
திதி : சதுர்த்தி
பிற்பகல் 4.46 வரை.
நட்சத்திரம்: விசாகம்
பிற்பகல் 12.34 வரை.
*சங்கடஹர சதுர்த்தி விரதம்*
சுபநேரம் : 12.11 - 1.41
ராகுகாலம்: 7.41 - 9.11
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

விடுதலை என்பது கேட்டவுடன் கிடைப்பதன்று. கடும போராட்டத்தின் பின்னரே அது கிடைப்பதாகும்.

*- தந்தை செல்வா*

## இசை நிகழ்வுகளிலும் எழுச்சிக் கீதங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்31

குடாநாட்டில் பல பகுதிகளிலுமுள்ள இந்து ஆலயங்களில் நாதஸ்வரக் கச்சேரிகளிலும் இன்னிசைக் கச்சேரிகளிலும் விடுதலைப் புலிகளின் மாவீரர் கானங்கள், தமிழீழ எழுச்சிப் பாடல்கள் இசைக்கப்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

வட்டுக்கோட்டைப் பகுதியிலும் கரணவாய்ப் பகுதியில் அமைந்துள்ள முருகன் ஆலயத்திலும் இத்தகைய கீதங்கள் இசைக்கப்பட்டபோது மக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்றதைக் காணக்கூடியதாக இருந்தது. (ஒ-13-139)

# எங்களைப் பற்றியும் சிந்திப்பீர்களா?



**'என் நேசத்திற்குரிய
பெரியோரே!
என்னைப்போல் - உங்கள்
அயலில் உள்ள சிறுவர்களும்
மகிழ்ச்சியுடன் வாழ்வதை
உறுதி செய்கிறீர்களா??'**

அவர்களின்.......

- ❑ உரிமைகள் மறுக்கப்பட்டு,
- ❑ துஷ்பிரயோகத்திற்குள்ளாகி,
- ❑ மகிழ்ச்சி பறிபோனால்.....

அதன் விளைவுகள் ஜீரணிக்க முடியாததாகி விடும்! எந்தவொரு துஷ்பிரயோகத்தாலும் சிறுவர்கள் சின்னாபின்னப்படுகிறார்களே தவிர சிறப்படைந்து விடுவதில்லை.
"சிறோரின் வளர்ச்சி பாரிற்கு எழிச்சி"

– ரீ.ரீ.மயூரன்

*உங்கள் தொடர்புகட்கான எங்கள் முகவரி:*
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு,
அறை எண் 30,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.
T.P:021-2261 Ext.274

*சிறுவர் பாதுகர்பபு (ஐ.இ) அனுசரணையுடன் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினரின் வெளியீடு.* (C/21392)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**ஸ்ரீ தர்சனன்**

*(B.Music)*

**அவர்கள்**

இசைத்துறை விரிவுரையாளராக நியமனம் பெற்றமையையிட்டு வாழ்த்துவதுடன், அவரது இசைத்துறைச் சேவை வளர பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானை இறைஞ்சுகிறோம்.

*யாழ்ப்பாணம்.* (2275) **கலாரசிகர்கள்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1992 - 12 - 07



மறைவு 2001 - 04 - 09

செல்வன்

**தவேந்திரன் கார்த்தீபன்**

30.03.2002

*ஓராண்டு மறைந்தோடிப் போனாலும்*
*பண்பு மிகு மகனே கார்த்திபா!*
*உன் பாசமுகம் மறப்போமா?*
*நீ இருந்த வாழ்நாளில் நிம்மதியாய் வாழ்ந்தோம்*
*நீ இல்லாத உலகினிலே நிதம் கலங்கி நிற்கின்றோம்.*

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சந்தை வீதி,*
*இமையாணன்,*
*உடுப்பிட்டி.* (2285)

*அ.தவேந்திரன் (சோக்கர்)*
குடும்பத்தினர்.

## கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**CANADIAN THAMIL BROADCASTING CORPORATION**

சொல் புதிது ....... சொல்லின் சொல் புதிது
பொருள் புதிது ....... பொருளின் பொருள் புதிது

## கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

தமிழ் கூறும் உலகின் முதலாவது 24 மணிநேர தனித் தமிழ் வானொலி காற்றலைக் காலையின் 11ஆவது ஆண்டு

கனடியக் காற்றுத் திருவிழாவில் சங்கமம் *II*

ஈழத்துப் படைப்பாளிகளின் எழுத்தாற்றலை உலகத்தரத்துக்கு எடுத்துவர, ஈழத்து எழுத்தாளர்களிடமிருந்து கதை, கவிதை, நாடகம், கட்டுரை ஆகிய படைப்புக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. போட்டிக்கான இந்த ஆக்கங்கள் படைப்பாளிகளின் சொந்தக் கற்பனையில் சொந்தப் படைப்பாக எவ்விடயத்தையும் உலக தரத்துக்கு இவர்கள் வெளிப்படுத்தலாம்.

| | | |
|---|---|---|
| முதலாவது பரிசு | 7500 | ரூபா |
| இரண்டாவது பரிசு | 5000 | ரூபா |
| மூன்றாவது பரிசு | 2500 | ரூபா |
| நான்காவது பரிசு | 1500 | ரூபா |
| ஐந்தாவது பரிசு | 1000 | ரூபா |

**உங்கள் ஆக்கங்கள் 2002 ஏப்ரல் 30க்கு முன்னர் எங்களை வந்தடையவேண்டும்.**

*அனுப்பவேண்டிய முகவரி:*

**கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**
தபால்பெட்டி இலக்கம் 10,
மட்டக்களப்பு.

(C/21296)

# நிதிச் சேவையில் வெற்றிகரமான தொழிலொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு இதோ உங்களுக்கு ஒரு நல்லவாய்ப்பு!

மக்கள் வங்கி மக்களுக்கான அதன் அர்ப்பணிப்பினை மெய்ப்பிக்கும் வகையில் தற்பொழுது செயல் முனைப்பும் புத்தூக்கமும் கொண்ட ஒரு வங்கியாக தன்னை மீள ஸ்தாபித்து வருகின்றது. இதனைக் கருத்திற்கொண்டு, சாதனைகளை நிகழ்த்துவதில் அவாக்கொண்டிருக்கும் ஆற்றல் மிக்க இளைஞர்/யுவதிகளை நாங்கள் இப்பொழுது எமது வங்கிக்கு ஆள்சேர்ப்பு செய்துவருகின்றோம். நாங்கள் தேடும் ஆள் நீங்களாக இருந்து, நாட்டின் எந்த ஒரு பாகத்திலும், குறிப்பாக கீழே குறிப்பிடப்படும் மாவட்டங்களில் பணிபுரிவதற்கு விருப்பம் கொண்டிருக்கும்பட்சத்தில் நீங்களும் எமது அணியில் இணைந்துகொள்ளலாம்.

# பிராந்திய வங்கித் தொழில் உதவியாளர்கள் - பயிலுநர்கள்

தமிழ் மொழியில் தேர்ச்சியைக் கொண்டிருக்கும் ஒரு சில உறுப்பினர்களைப் புதிதாகச் சேர்த்துக்கொள்வதன்மூலம் கீழே குறிப்பிடப்படும் மாவட்டங்களில் அமைந்துள்ள எமது கிளைகளில் பணிபுரியும் ஊழியர் அணியினரை உடனடியாகப் பலப்படுத்தவேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டுள்ளது.

**மாவட்டங்கள்**

அம்பாறை, மட்டக்களப்பு, பதுளை, யாழ்ப்பாணம், நுவரெலியா, திருகோணமலை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி.

இதற்குத் தேவைப்படும் தகைமைகள் வருமாறு:

- க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஒரே அமர்வில் 3 திறமைச் சித்திகளுடன் 4 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். (புதிய பாடத்திட்டத்தின் கீழ் ஒரே அமர்வில் 2 திறமைச் சித்திகளுடன் 3 பாடங்களில் சித்தி)
- க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஒரே அமர்வில் குறைந்தது 6 திறமைச் சித்திகளைப் பெற்றிருக்க வேண்டும். (ஆங்கில மொழி, கணிதம் மற்றும் தமிழ்மொழி என்பவற்றில் கட்டாயமாகத் திறமைச் சித்திகளைப் பெற்றிருக்க வேண்டும்.)
  விண்ணப்பதாரர் குறித்த மாவட்டத்தில் 3 வருடங்களுக்கு மேல் நிரந்தரமாக வசித்திருத்தல் வேண்டும்.
- வாடிக்கையாளர் சேவையுடன் சம்பந்தப்பட்ட தொழில்துறைகளில் அனுபவத்தைப் பெற்றிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- விண்ணப்பதாரர்கள் 2002.04.10ஆம் திகதியன்று 22 வயதுக்குக் குறைந்தவர்களாக இருந்து வருவதுடன், பொறுப்புக்களை ஏற்கக்கூடிய ஆற்றலையும் கடும் உழைப்பில் ஈடுபடக்கூடிய விருப்பினையும் கொண்டிருப்பதுடன், ஒரு குழுவாக இணைந்து சிறந்த முறையில் பணியாற்றக்கூடிய அனுகுமுறையையும் சாதனைகளை நிகழ்த்தும் அவாவினையும் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் வசீகரமான ஆளுமையையும் நல்ல தொடர்பாடல் திறன்களையும் அவர்கள் கொண்டிருத்தல் அவசியமாகும்.
- பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
- முழுமையற்ற விண்ணப்பப் படிவங்களும் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பப் படிவங்களும் நிராகரிக்கப்படும்.
- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு கிளை வங்கித் தொழிலையும் உள்ளிட்ட வங்கித் தொழிற்றுறையின் விரும்பப்படும் துறைகளை உள்ளடக்கக்கூடிய விதத்தில் விரிவான முறையில் தொழிலில் இருந்துகொண்டே வழங்கப்படும் பயிற்சி மற்றும் வெளிப் பயிற்சி ஆகியவை வழங்கப்படும். இக்காலப் பிரிவின்போது அவர்களுக்கு ஒரு கொடுப்பனவு (Allowance) வழங்கப்படும். பயிற்சியை வெற்றிகரமாக முடித்தபின்னர் ஒப்பந்த அடிப்படையில்/நிரந்தர அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படமுடியும். அந்த நிலையில் அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளமும் ஏனைய வசதிகளும் மிகவும் கவர்ச்சிகரமானவையாக இருந்துவரும் விதத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. வங்கித் தொழில் உதவியாளர்களாக திருப்திகரமான முறையில் செயற்பட்டிருப்பவர்கள் வங்கியின் நிரந்தர ஆளணிக்குள் உள்ளெடுக்கப்பட்டால் ஏனைய அனுகூலங்களும், தமது திறன்களை அபிவிருத்தி செய்துகொள்ளக்கூடிய வாய்ப்பும், பன்முகப்பட்ட போட்டித்திறன் கொண்ட ஒரு துறையில் பணியாற்றுவதற்கான வாய்ப்பும் அவர்களுக்கு வழங்கப்படும்.

வங்கித் தொழில்துறையில் ஒரு தொழிலைப் பெற்று வெற்றிகரமாக முன்னேறிச் செல்வதற்கு நீங்கள் விரும்பினால் உங்கள் தகைமைகள் மற்றும் அனுபவங்கள் குறித்த விவரங்களுடன் ஒரு விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்து, சான்றிதழ்களின் பிரதிகளையும் உங்கள் தகைமைகளை ஊர்ஜிதம் செய்யக்கூடிய விதத்திலான பரீட்சைப் புள்ளிகளையும்/தரங்களையும் குறித்த மாவட்டத்தில் நீங்கள் 3 வருடகாலம் நிரந்தரமாக வசித்து வந்திருப்பதனை ஊர்ஜிதம் செய்யும் பிரதேச செயலாளரின் அத்தாட்சிப்படுத்தலுடன் கூடிய கிராம சேவா அதிகாரியின் சான்றிதழையும் இணைத்துக் கீழேயுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கவும். மேலும், உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர் அல்லாத 3 பேரின் (Referees) பெயர், முகவரி, தொலைபேசி எண் முதலிய விவரங்களையும் அனுப்பிவைக்கவும். கடித உறையின் இடதுமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் மற்றும் மாவட்டம் என்பவற்றைக் குறிப்பிடவும்.

விண்ணப்பங்கள் 2002.04.10ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

ஏதேனும் விதத்தில் செல்வாக்கினைப் பிரயோகிக்க முயல்வது உடன் தகுதியீனத்தை எடுத்துவரும். இந்த விளம்பரத்தின் பிரகாரம் தகைமை பெற்றிருப்பவர்கள் மட்டுமே இதற்கு விண்ணப்பித்தல்வேண்டும். விண்ணப்பதாரர்களில் எம்மால் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களுடன் மட்டும் தொடர்புகொள்ளப்படும்.

**பிரதம முகாமையாளர் (மனித வளம்)**
**மக்கள் வங்கி தலைமை அலுவலகம்,**
**75, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு - 02**

(சி-21364)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வரணி வடக்கு கும்பிட்டான்புலம் அருள்மிகு ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் ஆலய

# புனராவர்த்தன பஞ்சகுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேக விழாச் சிறப்பிதழ்

# 31-03-2002

## ஆதீனமுதல்வரின் அருளாசியுரை

விநாயகர் அடியார்களே!

வரணி வடக்கு கும்பிட்டான் புலந்தனில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் விநாயகப்பெருமானுக்கு இன்று மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பெரு மனமகிழ்ச்சியடைகின்றோம். விக்கினங்களை நீக்கும் விநாயகப் பெருமான், வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு இவ்வாலயத்தில் நீண்ட காலமாக எழுந்தருளியிருந்து அருளாட்சி புரிவது இங்கு வாழும் மக்களின் சைவப் பண்பாட்டையும், ஆன்மீக ஒளியையும் பெறும் பொருட்டேயாகும்.

ஓர் ஆலயத்தில் பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறுவது மஹா கும்பாபிஷேகம். இதனைப் பார்ப்பதும், மனதால் அனுபவிப்பதும் பெரும் புண்ணியப் பேற்றைத் தரும்.

மனிதவாழ்வை மேம்படுத்தும் பொருட்டு நம்மவர் ஊர்கள் தோறும், கிராமங்கள் தோறும், நகரங்கள் தோறும் ஆலயங்களை அமைத்தனர். ஆலயத்தில் நடைபெறும் விழாக்களும், வழிபாடுகளும் மனிதப் பிறவியின் பெரும்பயனை அனுபவிக்கும் பொருட்டே நடைபெறுகின்றன. இதனையே நமது முன்னோரும் கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றும், ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்றும் எடுத்துரைத்தனர். இதனை ஒவ்வொரு சைவமக்களும் உணர்ந்து நித்தலும் எம்பிரானுடைய கோயிலுக்குச் சென்று வழிபடுவது எமது துன்பங்களில் இருந்து மீளுவதற்கு வழியாகும். எல்லாவற்றுக்கும் தனித்தலைவனாக இருக்கும் விநாயகப் பெருமானை வழிபட்டு பிறவிப்பயனை அடைவோமாக!

இன்று நடைபெறும் கும்பாபிஷேகம் அனைவருக்கும் திருவருள் கிடைக்க வழிகோலட்டும். இக்கும்பாபிஷேகத்தை நடத்திவைக்கும் குருமார்களுக்கும், வரணி வாழ் மக்களுக்கும் இறையாசி கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹா சந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பிரமாசார்ய சுவாமிகள்.**

## ஆலய அறங்காவலரின் ஆசிச்செய்தி

சீரும் திருவும் கல்வியும், மருவிய தென்மராட்சியின் திருமுகம்போல் விளங்கும் தேவாலயங்கள், அறிவாலயங்கள், முக்கனிச்சோலைகளும், தென்னை, பனை முதலான தருக்களின் நெருக்கமும், உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோராக விளங்க உதவும், வயல் நிலவளங்களும் நிறைந்த ஊர் வரணி என்னும் கிராமமாகும்.

இந்தக் கிராமத்திலே வரணி வடக்கு என்னும் இடத்தில் அடியார்கள் சூழ இருக்க நெற்றித் திலகம் போல் வீற்றிருப்பது கும்பிட்டான் கற்பகப் பிள்ளையார் கோயிலாகும். விநாயகப் பெருமானிடம் தம் குறைகளைக் கூறிக்கும்பிட்டு கேட்ட வரங்களை பெற்றமையினால் கும்பிட்டான் கற்பகப் பிள்ளையார் என்னும் பெயர் சூட்டப்பெற்றது.

எனது மூதாதையினர் (வாரியார் வல்லியார்) ஏறத்தாழ 1696ஆம் ஆண்டளவில் இந்த ஆலயத்தை ஸ்தாபித்து அவரின் பரம்பரையில் வந்த எனது பூட்டன், பேரன், தந்தையார், பெரிய தந்தையார் கோயில் முகாமையைப் பொறுப்பேற்று, ஆதீனகர்த்தாவாகவும், அறங்காவலராகவும், நிலபுலங்களை தர்மசாதனம் செய்தும் நிர்வாகத்தைக் குறைவின்றி நடத்தினார்கள். எனது பெரிய தந்தையாரின் மறைவின் பின் அவர்கள் ஆற்றிய தொண்டைத் தொடரும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

பின்பு எனது முகாமைக் காலத்தில் முழுமையாக ஆலயம் புனரமைக்கப்பட்டு இன்று (31-03-2002) ஞாயிற்றுக்கிழமை புனருத்தாரண மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். எவ்வளவோ இடர்களின் மத்தியிலும் இப்பாரிய திருப்பணி வேலைகளைச் செய்து முடிப்பதற்கு அயராது உழைத்த திரு.வீ.கிருபானந்தமூர்த்தி அவர்களின் பங்கு அளப்பெரியதும் போற்றப்பட வேண்டியதுமாகும். வெளிநாடுகளில் வசிக்கும் விநாயகப் பெருமானின் அடியார்களும், இவ்வூர் அன்பர்களும் செய்த பண உதவியினால் இவ்வாலயம் இன்று புதுப்பொலிவுடன் காட்சி அளிக்கின்றது. இந்த நன்னாளில் சகல மக்களும் சீரோடும், சிறப்போடும் வாழ விநாயகப் பெருமானின் அருள் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.க.குமாரசுவாமி**
அறங்காவலர்.

கட்டட அமைப்பு:
**சிற்பாசாரியார் நா.கோபாலரத்தினம்**
**அராலி தெற்கு.**



## ஆலய குருக்களின் அருளாசி

இலங்காபுரியின் வடபால் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமைய சைவமும் தமிழும் விளங்கும் தென்மராட்சியின் வட வரணியம்பதியில் வீற்றிருக்கும் ஐங்கரன் கற்பக விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் இன்று அதிகாலையில் வெகுவிமர்சையாக நடைபெறுகின்றது. இக்கும்பாபிஷேகமானது நாங்கள் நினைத்தவுடன் செய்யத்தக்க கைங்கரியம் அல்ல. இக்கும்பாபிஷேகத்தை எங்கள் கண்குளிரப் பார்ப்பதற்கு நாங்கள் பெரிய பாக்கியம் செய்தவர்களாகின்றோம். அப்படிப்பட்ட ஒரு கும்பாபிஷேகம் இன்று எங்கள் வரணியம்பதியில் வீற்றிருக்கும் கற்பக விநாயகனுக்கு நடைபெற்று அருள்பாலித்தவண்ணம் இருக்கின்ற இந்தநேரத்தில் நாட்டில் அமைதி, சாந்தி, சமாதானம் ஏற்பட காலம் கனிந்துவரும் இவ் வேளையில், ஐங்கரனின் அருள்கடாட்சம் உண்டு என்ற நம்பிக்கையோடு தும்பிக்கையானை வாழ்த்தி வணங்குவோமாக.

*இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!*
*வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்*
*நோக்குண்டாம் மேனிநுடங்காது பூக்கொண்டு*
*துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்*
*தப்பாமற் சார்வார் தமக்கு.*

முப்போதும் திருமேனி தீண்டி அர்ச்சிக்கும் அந்தணர்
**சிவஸ்ரீ வித்தியானந்த சர்மா**
*"சர்வே ஜனாகா சுகினோ பவந்து"*

## ஆலயத்தின் மகிமை

*திருவுங் கல்வியும் சீருந் தழைக்கவும்*
*கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்*
*பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்*
*பெருகு மாளத்துப் பிள்ளையைப் பேணுவாம்.*

"கோயில் சிறக்கக் குடி சிறக்கும்" என்பது ஆன்றோர் வாக்கு. தென்மராட்சியின் வடவரணிப் பதியில் கோயில் கொண்டு எழுந்தருளி அருள்பாலிக்கும் கும்பிட்டான்புலம் அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் எனும் குடமுழுக்குப் பெரு விழா இன்று நடைபெறுகிறது.

"கும்பாபிஷேகம் கோடி புண்ணியம" என்பது அருமறைக் கூற்று, எனவே கும்பாபிஷேகத்தைப் பார்ப்பதும் அதனிற் கலந்துகொள்வதும் கிடைத்தற்கரிய பெரும் பேறாகும். அந்தப் பேறு எமக்குக் கிடைத்திருப்பது பெரும் பாக்கியமே.

வரணி, சைவமும் தெய்வத் தமிழும் தொன்றுதொட்டு விளங்கிய தொல்பதி. விநாயகப் பெருமானின் அருளாட்சியே மக்கள் வாழ்வின் அடிநாதமாக விளங்குகிறது. மக்களின் அன்றாட வழிபாட்டினை ஏற்று வேண்டுவார் வேண்டுவதை ஈயும் இங்கரத் தண்ணலின் அருட் சிறப்பினை அடியவர் அனைவரும் அறிவர்.

இப்பதி மக்களின் கல்வி மேம்பாடு, பண்பாட்டுச்சிறப்பு, தெய்வ நம்பிக்கை ஆகிய அனைத்தும் விநாயகப் பெருமானின் திருவருட்சித் திகளே என்பது தெளிவு.

விநாயகப் பெருமானின் அருளாட்சியால் ஆலயப் புனர்நிர்மாணப் பணிகள் உரிய விதிமுறைப்படி சிறப்பாக அமைக்கப்பட்டமை திருவருள் தந்த பேறு. ஆலயத்தின் பிரதான மண்டபங்கள், பரிவார மூர்த்திகளுக்குத் தனித்தனி கோயில்கள், நாகத்தம்பிரானுக்குத் தனிக்கோயில், யாகசாலை என்பன புதிதாக நிர்மாணிக்கப்பட்டு இவையாவும் புதுப்பொலிவுடன் விளங்க ஆலயம் ஆலயமாகத் திகழ்கின்றது.

இத்தலம் பன்னெடுங்காலமாக, பல தலைமுறையாக கந்தபுராணபடனம், பெரியபுராணபடனம் செய்யப்படுகின்ற புண்ணியதலமாக விளங்கு கின்றது. நம்முன்னோர்களால் நவிலப்பட்ட கந்தபுராண ஏட்டுச் சுவடிகள் இன்றுவரை பக்தி பூர்வமாகப் பேணப்பட்டு வருகின்ற சிறப்பிற்குரிது இத்தலம்.

கோயில்கள் எமது பண்பாட்டு அருள் நிலையங்கள். இவற்றைக் காலத்துக்குக் காலம் புதுக்கியும் செப்பனிட்டும் குடமுழுக்கு விழா எடுப்பது சைவமக்களின் இன்றியமையாத கடமையாகும். இந்த வகையில் இப்பகுதி மக்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். எல்லாம் வல்ல கற்பக விநாயகப் பெருமான் இவர்கள் அனைவருக்கும் எல்லா நலமும் கொடுத்து மங்கள வாழ்வு வாழ அருள்புரிவாராக என்று யாவரும் பிரார்த்திப்போமாக.

கற்பக விநாயகர் பொற்பதம் சரணம்!

**க.கிருஷ்ணர்** (இளைப்பாறிய ஆசிரியர்)

கூரை வேலை:
[illegible]

## சர்வபோதகரின் ஆசிச்செய்தி

இறைவனை மனம், மொழி, மெய்யினால் வழிபடுவதற்கு அமைந்த இடம் ஆலயமாகும். "ஆலயம் தானும் அரனென தகுமே" என்கிறார் திருமூலர். புதுப்புது ஆலயங்களைக் கட்டி கும்பாபிஷேகம் செய்வதிலும்பார்க்க கட்டடங்கள் அழியப்போகின்ற நிலையில் இருக்கின்ற ஆலயங்களைக் காலத்திற்குக் காலம் திருப்பணிகளைச் செய்து புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்யவேண்டியது எமது கடமையாகும்.

இக்காலத்தில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் விருப்பப்படி பல கோயில்களைச் சாஸ்திரத்திற்கு முரணாகக் கட்டிக் கும்பாபிஷேகம் செய்வதும் பூசைக்கு இருப்பவர் வயோதிபத்தினாலும், ஒருசிலர் ஊதியம் போதாமையாலும் கொழும்பிற்கும் வெளிநாடுகளுக்கும் செல்வதால் இங்கு இருக்கின்ற பல கோயில்கள் பூசை இல்லாமலும் நான்குநேரம், மூன்று நேரம் பூஜை நடைபெற்ற கோயில்கள் ஒரு நேரப் பூசையும் பலகோயில்களுக்கு ஒரு பூசகர் பூசை செய்வதும் மனதிற்கு மிகச் சஞ்சலமாக இருக்கின்றன. எனவேதான், அந்தக் காலத்தில் ஊருக்கு ஒன்று அல்லது இரு கோயில்கள் இருக்கும். அந்த ஊர்மக்கள் இரு கோயில்களுக்கும் வாரி வழங்கி புனர்நிர்மாணங்களைச் செய்து மிகச் சிறப்பாகப் பேணுவார்கள்.

இக்காலத்தில் பிள்ளைகளுக்குச் சீதனம் கொடுப்பதற்கு வீடுகள் கட்டுவதுபோல் கோயில்களைக் கட்டுகிறார்கள். இதனால் என்ன நடக்கின்றது எனில் சிலகாலம் செல்லக் குடும்பப்பூசல், உறவினர் பூசல்கள் ஏற்பட்டு இப்படியாகக் கூட்டுவழிபாடு இல்லாமல், உபயகாரர் என்ற நிலைமாறிவிடும். எல்லோரும் எஜமான் என்ற நிலைவந்து கூட்டுவழிபாடு இல்லாமல், கோயிலில் நடைபெறும் சரியைத் தொண்டுகள் இல்லாமல், சம்பளம் கொடுத்தே ஆள்களை வேலைக்கமர்த்தி (சுவாமி தூக்குதல்) செய்ய வேண்டிய நிலைவந்துவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகின்றது.

சிலசில இடங்களிற் பூசல் இல்லாமல் ஒற்றுமையாக நடைபெறுகின்றது. இது எதைக் குறிக்கின்றதென்றால் வேகமாக ஓடும் துவிச்சக்கரவண்டி கொஞ்சத்தூரம் பிறிவிலில் ஓடுவதுபோல் சில கோயிலில் மக்கள் நடப்பதைப்பார்த்தால் அப்படி அச்சப்படத் தேவையில்லை என மனம் அமைதி அடைகிறது. (கும்பிட்டான் புலம் கற்பக விநாயகர்) வரணி மக்கள் ஒன்று சேர்ந்து ஆலயத்தைப் புதுக்கோயில் என்று சொல்லக் கூடிய முறையில் அத்திவாரம் முதல் அகழ்ந்து கட்டி இன்றைய தினத்தில் கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. இப்போது அமைந்துள்ள கோயிலைப் பார்த்தால் பிள்ளையாருடைய துவிதள விமானம், சிற்பக் கலைகள், முருகன், வைரவர் ஆலயங்கள் சகலதும் அழகுற அமைந்து உள்ளம் பூரிக்கின்றது.

சைவ நாயன்மார்கள், அரசர்கள், ஜமீன்தாரர்கள் கட்டிய ஆலயங்களுக்குச் சென்று உள்ளம் பூரித்துப் பாசுரங்களைப் பாடியிருக்கிறார்கள். நாமும் அவர்களைப் போல் கோயில்களைத் தரிசித்து அவர்கள் பாடிய தேவாரத் திருவாசகங்களைப் பாடிப் பயனடைவோமாக.

*"நாடும் நகரமும் நற்திருக்கோயிலும்*
*தேடித் திரிந்து சிவனென்று பாடுமின்".*

சர்வபோகதகர்
பிரதிஷ்டா வித்வ ஜோதி, கிரியாரத்தினம்
**பிரம்மஸ்ரீ இ.சுப்பிரமணியக் குருக்கள்**
அரியாலையூர்.

## நம்பினோரைக் கைவிடாத கும்பிட்டான் கற்பகப் பிள்ளையார்

இந்த ஆலயத்தைப் புனரமைத்துப் புதுப்பொலிவுடன் காணவேண்டுமென்ற நோக்கத்துடன், 21.01.1999இல் பாலஸ் தாபனம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஊர்மக்களின் பண உதவியினால் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. எப்படி இந்தக் கைங்கரியத்தை நிறைவேற்றப் போகிறோம் என்று ஏங்கிக்கொண்டிருந்த வேளையில், பிள்ளையாரின் அருளினால் வெளிநாட்டில் உள்ள அன்பாகள் திருப்பணிக்கு வாரி வழங்கினார்கள்.

கர்ப்பக்கிரகத்தில் இருந்து ஸ்தம்ப மண்டபம் வரை இடித்து அகற்றி தற்போது கர்ப்பக்கிரகம், 33 சிற்பங்கள் அடங்கிய துவிதளவிமானம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், தரிசன மண்டபம், ஸ்தம்ப மண்டபம், பரிவார மூர்த்திகளான முருகன், வைரவர், நாகதம்பிரான், தம்பப்பிள்ளையார், மூசியம், பலிபீடம், யாகசாலை இவையாவும் அத்திவாரத்தில் இருந்து கட்டப்பட்டு வர்ணம் தீட்டி புதுப் பொலிவுடன் காட்சியளிக்கின்றது.

இவைகள் எம் ஊரைப் பொறுத்தவரை பாரிய திருப்பணி என்றே சொல்லலாம். நாம் எதிர்பார்த்ததைவிட மேலதிக திருப்பணி வேலைகள் நடைபெற்றிருப்பதை எண்ணும் போது பிள்ளையாரின் அருட்கடாட்சம் எத்தகையதென்பதை சொல்லில் வடிக்க முடியாதுள்ளது. எல்லாம் அவரின் கருணை.

திருப்பணி வேலைகள் ஆரம்பித்த நாளிலிருந்து ஒவ்வொரு செயல்களையும் அவை ஒப்பேறும் விதங்களையும் பார்க்கும்போது பிள்ளையார் தான் தோன்றாத் துணையாக நின்று இந்தத் திருப்பணி வேலைகளை முடித்துவைத்துள்ளார் என்பதை நாம் உணரக்கூடியதாக இருக்கிறது. அத்துடன் வைகாசிமாத மஹோற்சவத்திற்கு முதல் இந்த ஆலயத்திற்கு வெளிநாட்டில் இருக்கும் எம்மூர் அன்பர்கள் இருவர் ஜெனரேற்றர், ஒலிபெருக்கி சாதனத்தையும் அன்பளிப்புச் செய்ய விரும்புவதனை அறிந்து உள்ளம் பூரிக்கின்றது. கும்பிட்டான் புல கற்பகப் பிள்ளையார் அருள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டுமென்று இந்த மஹா கும்பாபிஷேக நன்னாளிலே பிரார்த் திப்போமாக.

ஆலயத் தொண்டில் **திரு.வீ.கிருபானந்தமூர்த்தி.**

வர்ண வேலை:
**ரவி ஆட்ஸ்**
**திருநெல்வேலி.**

**வரணி வடக்கு.** (C/2138). **- அறங்காவலர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் பொதுநூலக திறப்பு விழாச் சிறப்பிதழ்

## ஆதீன முதல்வரின் அருளாசி



இணுவில் பொது நூலகத்திற்கு அமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழா நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம். வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான். இதனை உணர்ந்த மனிதன் கிராமங்கள், நகரங்கள், வீடுகள், கோயில்கள், பொது இடங்கள் அனைத்திலும் நூலகங்களை அமைத்து மனிதனுடைய அறிவையும் தெளிவையும் சிந்தனையையும் வெளிக்கொணர்கின்றான். நூலகங்கள் மனிதனுக்குப் பூரணமான வாழ்வு வாழ வழிகாட்டுகின்றன.

இதனை உணர்ந்த இணுவில் மக்கள் இங்கு வாழும் மக்களுக்கு சனசமூக நிலையம் மூலமாகப் பொதுநூலகத்தை அமைத்து, சிந்தித்து செயற்பட வழிவகுத்துள்ளனர். கல்வியிலும் சமயப்பண்பாட்டிலும், முத்தமிழிலும் சிறப்புடைய இணுவில் மக்கள் மேலும் தங்களை உயர்த்திக்கொள்ள பொதுநூலகப் பணியை ஆரம்பித்துள்ளனர். இந் நூலகத்தை நல்ல முறையில் பயன்படுத்துவது ஒவ்வொரு மனிதனதும் கடமையாகும்.

நூல் எனும் சொல் பல வடிவம் பெறுகின்றது. கல்வியினுடைய அடையாளத்திலும் வளைந்துபோன பொருளை நேராக்குவதற்கும் பிரிந்து போன பொருளை ஒன்றாக்குவதற்கும் இச்சொல் பயன்படுகின்றது.

மனிதனுடைய வாழ்வைச் சீர்செய்ய நம்மவர் நமக்கு நூல் மூலமாக பல அறிவுக்கருத்துக்களைத் தந்துள்ளனர். இந்நூல் நிலையத்தை நமக்குத் தந்துள்ள சனசமூக நிலைய அன்புள்ளங்களைப் பாராட்டுகின்றோம். மக்களெல்லாம் இந்நூல் நிலையத்தைச் சிறப்பாகப் பயன்படுத்த இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

**இரண்டாம் குருமஹா சந்நிதானம்.**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**

## தலைவரின் உள்ளத்திலிருந்து...



எல்லாம்வல்ல ஸ்ரீபரராஜசேகரனின் திருவருளால் இணுவையம்பதியிலே பொதுநூலகம் ஒன்று உருவாகி இருப்பது மனதிற்கு பெரும் உவகையை அளிக்கின்றது. கலை கலாசாரங்களுக்கு மணிமகுடமாக விளங்கும் இவ்வூரில் பொதுநூலகம் ஒன்று இல்லாத குறை இன்றுடன் பூர்த்தியடைகின்றது. மேலும் இப்பொதுநூலகத்திற்கான விதையை 1930ஆம் ஆண்டளவில் எமது மூத்தோர் இட்டுச் சென்றுள்ளனர். அது இன்று தான் பெரு விருட்சமாக வளர்ந்து பெரும்பயனைத் தருவதற்காகக் காத்துநிற்கின்றது. இவ் பொதுநூலகத்தின் ஊடாக இவ் இணுவையம்பதி இந்நாட்டிற்குப் பல சேவைகள் புரிவதற்கு ஒருவாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டது. இந்நூலகத்தின் ஊடாக கணனிப்பிரிவு, பல அரிய நூல்தொகுதிகள், பாலர் பாடசாலை உள்ளக, வெளியக விளையாட்டுக்கள், கருத்தரங்குகள் போன்றவற்றை நடத்தி இந்நாட்டின் எதிர்கால சிற்பிகளை உருவாக்கும் மகத்தான பணியை மேற்கொள்ளவுள்ளது இதன் சிறப்பம்சமாகும்.

தலைவர்
**சொ.ஹரிஹரஜன்**

## "அறிவினை விருத்தி செய் அகண்ட மார்க்கு"



மனித வாழ்வு பண்பும் பயனுமுடையதாக அமைய என்றும் குறைவிலா நிறைவான கல்வி கலைகளைப் பெறவேண்டும். இதனைப் பாட்டுக்கொரு புலவன் பாரதி கூறும்போது "அறிவினை விருத்தி செய் அகண்டமார்க்கு" என்னும் கூற்றுக்கு இனங்க அறிவினை விருத்திசெய்யும் நிலையில் நூலகங் களின் பங்கு அளப்பரியதாகும். இந்த வகையில் இணுவை யம்பதியின் நற்சூழல் அமைவுடன் பொலிவுற அமையும் இணுவில் பொது நூலக மானது தனக்கே உரியதுமான பல சிறப்பம்சங்களைக் கொண்டு மிளிர்கின்றது. சனசமூக நிலையம் என்ற தன்மையின் ஒருபடி உயர்வாக இணுவில் பொதுநூலகமாக கற்போர்க்கு ஏற்ற வகையில் கற்பதற்குரிய அமைதியான சூழலை ஏற்படுத்திக் கொடுத்துள்ளமை போற்றுதற்குரிய விடயமாகும்.

செயலாளர்.
**க.பார்த்தீபன்**

## குருக்களின் ஆசியுரை




மனிதர்களாகப் பிறப்பது அரிது. அவ்வாறு மனிதனாகப் பிறந்தாலும் தர்மம் செய்வது அரிது. அறவழியில் பொருள் சேர்த்து தர்மம் செய்யவேண்டும். தர்மத்தில் பதி புண்ணியம், பசு புண்ணியம் என இருவகை உண்டு. பதி புண்ணியம் என்பது இறைவனுக்காகக் கோயில் கட்டுவது; கும்பாபிஷேகம் செய்வது போன்ற திருப்பணிகள் ஆகும். பசு புண்ணியம் என்பது மக்களுக்குச் செய்கின்ற தர்மங்களைக் குறிக்கும். மக்களுக்கு வேண்டிய அன்னதானங்கள் தர்மசாலைகள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், நூல் நிலையங்கள் போன்றவற்றை அமைப்பது ஆகும். செல்வத்துள் சிறந்த செல்வமாகிய கல்விச்செல்வத்தைப் பெற நூல்நிலையம் இன்றியமையாதது.

மாணவர்கள் கல்லூரிகளில், பாடசாலைகளில் கற்கும் கல்வி அவர்களை ஒரு நெறிப்படுத்துகிறது. ஆனால் நூலகங்களோ அவர்களுக்குப் பரந்த கல்வியினைப் புகட்டுகின்றன. இந்நூலகம் நவீன முறையில் கட்டப்பெற்று பல லட்ச ரூபா பெறுமதியான நூல்களையும் மாணவர்களுக்குத் தேவையான கணனிகளையும் கொண்டுள்ளது.

இந்நூலகம் சிறப்புற ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையாரை வழுத்தி அமைகின்றேன்.

**சிவஸ்ரீ வை.சோமஸ்கந்த குருக்கள்**
பிரதமகுரு,
ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் கோயில்,
இணுவில்.



## துணைவேந்தரின் வாழ்த்துரை



இணுவில் பொதுநூலகத் திறப்பு விழாவையொட்டி வெளிவரும் மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

மண்வளமும் மனவளமும் சிறந்து விளங்கும் இணுவில் கிராமம் கலை, கலாசாரங்களுக்குப் பெயர்போனது. இக்கிராமத்தில் ஒரு பொதுநூலகம் அமைத்து இன்று திறக்கப்படுவது, இங்குள்ள பெரியோர்கள், அறிஞர்களின் அறிவுத் தேடல் முயற்சியாக மலருகின்றது. "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" என்பதற்கிணங்க அறிவுசார் செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் மக்களுக்கு, குறிப்பாக மாணவர்களுக்கு இந்நூலகம் ஒரு வரப்பிரசாதம். ஏனையோரும் இன்றைய தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் அடிப்படையில் தமது அறிவு, புலமையை விருத்தி யாக்கவும், ஓய்வுநேரத்தைப் பயனுள்ள வழியில்கழிக்கவும் இந்நூலகம் அவர்களுக்குப் பெரிதும் உதவும் எனலாம்.

இணுவில் மக்களை ஒன்றிணைக்கும் நிலையமாக விளங்கும் சனசமூக நிலையத்தில், நூலகம், நவீன தகவல் தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டு அமையவிருப்பதை அறிந்து மகிழ்ச்சி யடைகின்றேன்.

இணுவில் கிராமத்தைக் கட்டியெழுப்பும் முயற்சி மேலும் முன்னெடுக்கப்படவேண்டும். இந்நூலகத்தைச் சிறந்த முறையில் அமைத்து, திறப்பு விழாவை நடத்த அயராது உழைத்த அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

உங்கள் பணி தொடர, விழா சிறக்க என் வாழ்த்துக்கள்.

ஒப்புரவாளர்,
**பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை.**
**துணைவேந்தர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.**

## அருள் பொங்கி வாழி



தன்பெரும் புகழாகத் தாங்கி மிளிர் இணுவிலூர்ச்
சன்மார்க்க மக்கள்தந்த
தங்கசன சமூகநிலை யமும்பொது நூலகமும்
சர்வகலைப் பழங்கள் சொரியும்
அன்புமலர்க் கற்பகம் போன்று தமிழ் மக்களுயர்
ஆட்சியும் சுக வாழ்க்கையும்
அறவொளிக் காட்சியும் நல்கிடுங் காரனின்
அருள் பொங்கி வாழி! வாழி!

அன்பன் கவியோகி
**அருட்கவி.சீ.விநாசித்தம்பி M.A.**

## சீரிணுவைப் பெரும்பொது நூலகமும் வாழி!

கலைமகள் வாழுகின்ற திருக்கோ யிலாய்க்
கல்விகலை வளர்க்கின்ற பெரும்வா யிலாய்
நிலைபெறும் தலையாய கல்விச் செல்வம்
நீடுபுகழ் கலைச்செல்வம் மலிந்து வாழ
அலைகடலும் கடந்துதிர வியங்கள் தேடி
அணிநகராம் நல்லிணுவைக் கலைம களின்
பலகலையின் பொதுநூல கத்தை ஆக்கும்
பண்பாளர் வாழி! இளம் தொண்டர் வாழி!

**மஹாவித்துவான்**
**பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர் M.A.**

## போசகரின் வாழ்த்துச்செய்தி



மக்களின் அறிவுக் கண்ணாக விளங்கும் நூல் நிலைய மொன்று எமது கிராமத்தில் உருவாகுவதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடை கின்றேன். இணுவில் பொதுநூல் நிலையமானது கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு முன்பே உருவாக்கப் பட்டிருந்தாலும் அது தனது முழுக்கிளைகளையும் பரப்பி பெருவிருட்சமாக இன்று வளர்ந்துள்ளதையிட்டு எமது மக்கள் மகிழ்ச்சி கொள்ளாமல் இருக்கமுடியாது.

"தொட்டணைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றணைத்தூறும் அறிவு" என்ற பொய்யாமொழிப்புலவரின் கூற்றுக்கிணங்க மக்களின் அறிவுக் கடல் பெருகிட இணுவில் பொதுநூல் நிலையம் உதவும் என்பதில் சந்தேகமில்லை.

இணுவில் பொதுநூல் நிலையத்தின் தொழிற்பாடுகள் பரந்துபட்டவையாக இருப்பது மட்டுமன்றி காலத்தின் தேவையைப் பூர்த்திசெய்யக்கூடியனவாகவும் இருக்கும் என்பதிலும் சந்தேகமில்லை. நூல் நிலையம், வாசிகசாலை, கணனிப் பயிற்சி, முன்பள்ளி, கருத்தரங்குகள், உள்ளக விளையாட்டுக்கள், சிறுவர் பூங்கா, தண்ணீர்ப் பந்தல் எனப் பல்வேறுபட்ட நோக்கங்களைக் கொண்டதாக இணுவில் பொதுநூல் நிலையம் மிளிரவிருக்கின்றது. பல்வேறுபட்ட தேவை கொண்டவர்களும் இப்பொதுநூல் நிலையத்தின் ஊடாகத் திருப்தி காணமுடியும் என்பதில் சந்தேகமில்லை.

இணுவில் பொதுநூல் நிலையத்தில் போசகராக இருக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தமையை நான் பெரும்பேறாகக் கருதுகின்றேன். இதற்கு வழிகாட்டும் ஆசிரியர் ஞான.திருக்கேதீஸ்வரன் இந்நூல் நிலையத்தின் உருவாக்கத்திலும் வளர்ச்சியிலும் பெரும் பங்குகொண்டவர் என்பதைக் கூறிக்கொள்வதில் பெருமை கொள்கிறேன். இணுவில் பொதுநூல் நிலையத்தில் நிர்வாகம் ஆளுமைகொண்ட இளைஞர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதனால் இத்தகைய பொதுநூல்நிலையம் சிறப்பாக இயங்கி இணுவில் கிராமத்தின் வளர்ச்சியில் ஒரு மைல்கல்லாக விளங்க வேண்டும் என எல்லாம்வல்ல ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையாரை வேண்டுவதுடன் இந்நூல் நிலையம் இப்பிரதேசத்திலும், இலங்கையிலும், உலகத்திலும் இயங்கிவரும் பொதுநூல் நிலையங்களுக்கு எடுத்துக்காட்டாகவும் இயங்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

**க.தேவராஜா**
தலைவர், வணிகத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

மலர்த்தொகுப்பு
ஞான.திருக்கேதீஸ்வரன் (ஆசிரியர்)

## நூலகவிழா சிறப்புற வாழ்த்துவோர்:


இராஜேந்திரா
வர்த்தக நிலையம்
படங்கள் - கண்ணாடி
வியாபாரம்.
192(108), காங்கேசன்
துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. No: 021-2669.

வீனோ
நகைப் பூங்கா
தங்க, வைர நகை
வியாபாரம்.
T.P. No: 2824.
185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தயா
நகைப் பூங்கா
தங்க நகை வியாபாரம்.
213 C, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சிவசம்பு
களஞ்சியம்
இல.3, மின்சார
நிலைய வீதி,
பெரியகடை,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீ துர்க்கா
ஜீவல்லரி
188, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கரன் ரெக்ஸ்
றெடிமெற் ஆடைகளின்
சங்கமம்
No.106, GRAND BAZAAR,
JAFFNA.
(C/21386)

இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்
T.V.டெக் றேடியோ, வீடியோ, ஓடியோ
கருவிகள், கசற் வகைகள்,
மணிக் கூடுகள் பிலிம்றோல், மிதிவண்டி,
மிதிவண்டி உதிரிப்பாகங்கள் போன்ற
மற்றும் அழகுசாதனப் பொருள்கள்
விற்பனையாளர்
50, 52, 54 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

KABILA SHOE PALACE
Head Office
24/05 B Galpotha Street,
Kotahena, Colombo -13
Tel.: 074 - 612736
Res: No4.Kasthuriyar Road,
Jaffna.
Tel.: 021 - 3097.
021 - 2434.

GANGAI PRINTERS
166/01, NAVALAR ROAD ,
NEAR BROWN ROAD ,
JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமண மண்டபமும் தங்குமிட வசதிகளும்

வடபகுதியிலிருந்தும் மற்றும் எந்த நாட்டிலிருந்தும் கொழும்பு செல்லும் பயணிகளுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி

**VANIY INN லொட்ஜ்**

சகல வசதிகளுடன் குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவைபுரியும் சுத்தமான, பாதுகாப்பான, அமைதியான சூழலில்...
ஒரு முறை விஜயம் செய்து பார்த்தால் உண்மை புரியும்.

No:89,Hinny Appuhamy Mawatha,
Vanrooyan Street, Colombo - 13
T.P.No.01-433182, 472582.

(1243) M.திலகவதி, ஈஞ்சடி, சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

உதயம் 20 - 01 - 1927



அஸ்தமனம் 01 - 03 - 2002

### திருமதி கந்தசாமி விசாலாட்சி

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய் எம்மையெல்லாம்
வாழ்வாங்கு வாழவைத்த அன்புத் தெய்வமே!
எங்களைப் பிரிந்தின்று ஒரு திங்களுமானதுவே
தங்கள் பிரிவாலே அனலிடைப் புழுவானோம்
எங்கள் பாச தீபத்தின் ஆத்மா சாந்தியடைய
மஞ்சவனப்பதி முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஆனைக்கோட்டை வீதி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

(2257)

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## எக்காளத் தொனி

### மாபெரும் எழுப்புதல் கூட்டங்கள்

வெற்றி நிச்சயம்

விடுதலை சத்தியம்

வேதனையில் வாடுபவர்களே! நோய்களில் அவஸ்தைப் படுபவர்களே! பில்லி சூனியக்கட்டில் அகப்பட்டுள்ளவர்களே! குடும்ப சமாதானம் இல்லாமல் அலைகின்றவர்களே!

***வாருங்கள்! விடுதலையடையுங்கள்!!***

தேவ செய்தி அளித்து நோயாளர்கட்காக ஜெபிப்பவர், உலகமெங்கும் இறைவனால் வல்லமையாகப் பயன்படுத்தப்பட்டு வருபவர்...



### பாஸ்டர் மேவின் குணசெல்வம்

*(எக்காளத்தொனி ஸ்தாபகர், நிர்வாகி)*

*இடம்* :- யாழ்ப்பாணம் துரையப்பா ஸ்ரேடியம் முனியப்பர் கோவிலடி.
*காலம்* :- சித்திரை முதலாம் திகதி முதல் ஐந்தாம் திகதிவரை
நேரம் :- மாலை 4.00மணி



இருதய வியாதியிலிருந்து அற்புத சுகம் பெற்றவர்.



நடக்க முடியாதவராகி, பலரால் தூக்கிவரப்பட்டு ஜெபத்தின்மூலம் பூரண சுகத்தைப் பெற்றுக் கொண்டவர்.



மரணத்தின் விளிம்பிற்கு சென்று அற்புத சுகமடைந்தவர்.


(2261)


## உங்களின் புதிய தொழில் முயற்சிகளுக்கும், தற்போதைய தொழில்திறனை மேம்படுத்தவும்,

### சாமுவெல், சன்ஸ் அன்ட் கம்பனி வழங்கும்...

### (வடபகுதியின் தொழில்நுட்பத்துறை முன்னோடிகள்)

- சேவிஸ் ஸ்ரேஷன் மற்றும் கராஜ் உபகரணங்கள் ("ELGI" Air compressors, Single or Double post hoists, High pressure washing pumps, Grease pumps, 2 plst screw auto lifts, Tyre Changers etc.)
- கட்டட நிர்மாண உபகரணங்கள் ("FCM" Concrete mixers, "Exen" Poker vibrators)
- மின் இணைப்பு உபகரணங்கள் ("ABB" Switches & sockets, RCCBs, MCBs, MCCBs etc.)
- நீர் இறைக்கும் பம்பிகள் (Agro-water pumps, Waste water pumps, Submersible pumps etc.)
- பயணிகள் மற்றும் பொருட்கள் மின் உயர்த்திகள் ("Johnson" lifts, "Elephant" manual /electric chain blocks, "Beta" cable hoists etc.
- ஜெனரேட்டர்கள், மின் வலு உபகரணங்கள் (Generators and Power Tools)
- கட்டட நிர்மாண சேவைகளும் ஆலோசனைகளும்



★ 80 வருடத்திற்கு மேற்பட்ட பொறியியல் அனுபவம்.
★ இலகுவில் கிடைக்கும் உதிரிப்பாகங்களும் விற்பனைக்குப் பிந்திய சேவையும்.
★ இலங்கையில் அதிகளவில் பாவனையிலுள்ள உலகப்பிரசித்திபெற்ற இயந்திர சாதனங்கள்.
★ நம்பிக்கை, அக்கறையுடன் கூடிய தொழில்நுட்ப ஆலோசனை.

மேலதிக விவரங்களுக்கு ...
சாமுவெல் சன்ஸ் அன்ட் கம்பனி லிமிட்டட்
யாழ்ப்பாணத்தில் ...
கிளை அலுவலகம்/காட்சியறை
ஆஸ்பத்திரி வீதி (பஸ் நிலையம் எதிரில்)
யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-2665.

SINCE 1922

கொழும்பில் ...
சந்தைப்படுத்தல் பிரிவு
இல.45, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு 14.
தொலைபேசி: 421513, 430578, 074-618904.
E-Mail: Sales @ Samuel-Sons.com
Fax: 336397.


(C/21335)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.சிறைக்கு நிரந்தரக் கட்டடம்; நிதி இருந்தும் இடத்தெரிவில் இழுபறி

தமிழர் தாயகத்தில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றவேளையில் இன்றைய இளைய தலைமுறையினரின் சீரழிவுகளும் அதிகரித்துக்கொண்டே போகின்றன. இவற்றை இனங்கண்டு தடுத்து நிறுத்தி, சமூக விரோதிகளை சட்டத்தின்முன் நிறுத்தி, தண்டனைகள் பெற்றுக்கொடுப்பது இன்று அவசியமானதாகும். சட்டத்தின்முன் நிறுத்தப்பட்டவர்கள் தண்டனை அனுபவிக்கும் இடமாக யாழ்.சிறைச்சாலை உள்ளது.

தற்போது தற்காலிக ஏற்பாட்டில் செயற்படும் இந்தச் சிறைச்சாலையை நிரந்தர இடத்தில் அமைப்பது தொடர்பாகச் சர்ச்சைகள் எழுந்துள்ளன. யாழ்.சிறைச்சாலையை எந்த இடத்தில் அமைப்பது எனபதே தலையாய கேள்வியாகும்.



தற்போதைய யாழ்.சிறைச்சாலையின் முன்புறத் தோற்றத்தினையும், கைதிகளைப் பார்வையிட வந்துள்ள உறவினர் வெளியே காத்து நிற்பதையும் படத்தில் காணலாம்.

பணம் இருந்தால் எந்தப் பிரதேசமாயினும் சரி சிறைச்சாலையை அமைக்க வேண்டியதுதானே என நினைக்கிறீர்களா? அது தவறு சிறைச்சாலையை அமைப்பதற்குரிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளபோதிலும் நிரந்தரமான சிறைக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுவதில் இழுபறிநிலை தொடர்கிறது.

### வசதியின்மை

தற்போதுள்ள சிறைச்சாலையில் இடப்பற்றாக்குறை முக்கிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. தற்போதைய சிறைச்சாலையில் நூற்றுக்கும் குறைவான கைதிகளையே சிறைவைப்பதற்கான வசதிகள் உண்டு. ஆனால், அங்கு தற்போது இருநூறுக்கும் மேற்பட்ட கைதிகள் சிறை வைக்கப்பட்டுள்ளனர். இதனால் சிறைக் கைதிகளிடையே பல சச்சரவுகள் தோன்றுகின்றன. இதனைவிட தற்போது சிறைச்சாலை உள்ள இடம் சிறைச்சாலைக்குச் சொந்தமான இடமல்ல. கைதிகளிற்கான உணவு சமைத்து வழங்குவதற்கு இங்கு சமையலறை கூட இல்லை. இதனால் உணவுகள் வேறு இடங்களில் இருந்தே பெறப்படுகின்றன. உணவுகள் வேறு இடங்களில் இருந்து பெறுவதால் கல்லுச்சோறு, அவியாத பருப்பு, தரமின்மை, சுகாதாரமின்மை எனப் பல் வேறு முறைப்பாடுகள் எழுகின்றனவாம். மேலும் கைதிகளுக்கு வேறு மாவட்ட சிறைச்சாலைகள் போல சிறுகைத்தொழில் முயற்சி வசதிகள் இங்கு இல்லை. ஏனெனில் சமையலறை கட்டக்கூட இடமில்லாத போது கைத்தொழில் நடவடிக்கைகள் முன்னெடுக்க எங்கே இடம் இருக்கும்? இதனால் கைதிகளை சோம்பேறிகளாக்கி உணவு வழங்கும் நடைமுறையே இங்கு காணப்படுகிறது. மேலும் கைதிகளைப் பார் வையிட வருவோர் வெளியே காத்துநிற்பதற்கு ஒரு கொட்டகையோ கூடாரமோ இங்கு இல்லை. இதன் விளைவாக உறவினர்கள் நடுத்தெருவிலேயே காத்துநின்று கைதிகளைப் பார்வையிடவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் இடநெருக்கடி,

இருநூறுக்கும் மேற்பட்ட கைதிகளுக்காக இங்கே இருக்கும் மலசல கூடங்கள் மூன்றே மூன்றுதான். இது வியப்பான ஒன்றுதான். ஆனால் மலசல கூடங்களை மேலும் நிர்மாணிக்க இடமில்லையே. இவ்வாறான நிலையில் உள்ள யாழ்.சிறைச்சாலைக்கு புதிய கட்டடம் ஒன்று தேவைதான். அதை எங்கே அமைக்கலாம் என்பதே அடுத்த கேள்வியாகும்.

### எங்கே அமைப்பது?

சிறைச்சாலையை அமைப்பதற்கு மண்டைதீவு, நாவற்குழி, கோப்பாய் ஆகிய பகுதிகள் பரிசீலிக்கப்பட்டன.

ஆனால் இந்தப் பகுதிகளில் ஒன்றில் சிறைச்சாலையை அமைப்பதற்கு எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

மண்டைதீவு, நாவற்குழி ஆகிய பகுதிகளில் சிறைச்சாலை கட்ட அரசு நிலம் கிடையாது - இதைவிட கைதிகளை வைத்தியசாலைக்குக் கொண்டு வந்து செல்வது கடினமானகாரியம் ஆகும். மேலும் இப்பகுதிகளில் இருந்து கைதிகளை பருத்தித்துறை, மல்லாகம், சாவகச்சேரி, ஊர்காவற்றுறை போன்ற நீதிமன்றங்களுக்கு குறித்த நேரத்தில் வழக்குகளில் ஆஜராக்க முடியாத நிலை உள்ளது. தொலைத்தொடர்பு, போக்குவரத்து வசதி என்பன அரிதான இடங்கள் அவை. கைதிகளின் பெறறோர் உறவினர்கள் இத்தகைய இடங்களுக்குச் சென்று கைதிகளைப் பார்வையிடுவது கடினமானகாரியம்.

மேலும் கைதிகளை இவ்விடங்களிலும் பாதுகாப்பது மிகக் கடினமாகும். அத்துடன் இவ்விரு இடங்களும் கடற்கரையோரமாக இருப்பதால், வெளியாரால் இலகுவாக - இரகசியமாக - எட்டப்படக்கூடியதாகும் இந்த அச்சங்கள், உண்வு சிறைச்சாலை வட்டாரங்களில் நிலவி வருகின்றன. அத்துடன் இப்பகுதிகளில் ஒன்றில் விஸ்தீரணமான காணி ஒன்றை சுவீகரித்து சிறைச்சாலை அமைப்பதற்கு அதிக நாள்களாகும். இத்தகைய காரணங்களால் இங்கு சிறைச்சாலையை அமைப்பதற்கு சிறைச்சாலை வட்டாரங்கள் எதிர்ப்பு தெரிவித்துவருகின்றன.

### கைதிகளின் அட்டகாசம்

இவைகளைவிட கைதிகள் விடயத்தில் மிகவும் விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டிய கடப்பாட்டில் யாழ்.சிறைச்சாலை வட்டாரங்கள் தள்ளப்பட்டிருக்கின்றன. ஏனெனில் பயங்கரவாத தடைச் சட்டத்திலான கைதிகள் பெரும்பாலும் தற்போது விடுதலை பெறுகின்றனர். இவர்களைவிட ஏனைய அடாவடித்தன கைதிக்கும்பல்களை யாழ். மாவட்டத்தில் இருந்து வேறு மாவடங்களுக்கு அழைத்து செல்ல சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உதவி வந்தது. ஆனால் அந்தப் பணியை கடந்த சில மாதங்களுக்கு முன்பதாக அது நிறத்திவிட்டது. இது யாவரும் அறிந்தவிடயமும் ஒன்றே. ஆனால் ஏன் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கைதிகளை இடம்மாற்ற முன்வரவில்லை என ஆராய்ந்தபோது தான் கைதிகளின் அட்டகாசங்கள் புலப்பட்டன. கடந்த சில மாதங்களின் முன்னர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு உதவியுடன் யாழில் இருந்து தென் பகுதி நீதிமன்றங்களுக்கு கைதிகளை ஆஜர்படுத்த கப்பல் மூலம் கொண்டு செல்லப்பட்டனர். கப்பலில் பயணிக்கும் போது கைதிகளில் சிலர் கப்பலில் இருந்தவர்களிடம் மரியாதைக்குறைவாக நடந்ததாகக் கூறப்படுகிறது. செஞ்சிலுவைச் சங்கத்தினர் இந்த அடாவடித்தனத்தை விசாரிக்க முற்பட்டவேளை அவர்களை வாய்க்கு வந்தமாதிரி திட்டித் தீர்த்தும் தாக்கவும் முற்பட்டுள்ளனர் கைதிகள். இதனால் விரக்தியடைந்த செஞ்சிலுவைச் சங்கத்தினர் தமது பணியினை நிறுத்தியும் உள்ளனர். இதனால் தற்போது வேறு மாவட்ட நீதிமன்றங்களில் கைதிகளை ஆஜர்படுத்த முடியாத நிலை உருவாகியுள்ளது. இப்படியான கும்பல்களை நாவற்குழி, மண்டைதீவு போன்ற குடியிருப்புப் பகுதிகளில் சிறைச்சாலையை அமைபபது வேணடாத விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

இதற்கிடையில் யாழ்.கோட்டையில் பழைய சிறைச்சாலையை புனரமைத்து பயன்படுத்தலாம் என்று யோசனை வெளியிடப்பட்டது. ஆனால் கோட்டையில் சிறைச்சாலையினை அமைக்க விரும்பாது நாவற்குழி, மண்டைதீவு, கோப்பாய் என இழுத்தடிக்கப்படுகிறது இந்த விடயம்.

சிறைச்சாலை நிர்வாகம் நாவற்குழி, மண்டைதீவு பகுதிகளில் சிறைசசாலையை அமைக்க முடியாமைக்கு பல காரணங்களை முன்வைத்துள்ளன. கோட்டை பழைய சிறைச்சாலையை மீள நிர்மாணித்து தருவதற்கும சம்மதம் தெரிவிப்பதாக இல்லை. பண்ணையில் சிறைச்சாலையை நிர்மாணித்தால் போக்குவரத்து வசதி,

## மாவீரர் துயிலும் இல்லத்தை சிறைக்கூடமாக்க முயற்சி

**வோஷிங்ரன்**

வைத்தியசாலை வசதி, தொலைத்தொடர்பு வசதி, சிறு கைத்தொழில் வசதி, பாதுகாப்பு வசதி, பரந்த பிரதேசம் என சகல விதத்திலும் நன்மையாக இருக்கும். இவ்வாறான இடமொன்றில் சிறைச்சாலை அமைவதே மிகச் சிறந்ததாகும் என பரவலாக நம்பப்படுகிறது. இருந்தபோதிலும் இங்கு சிறைச்சாலை நிர்மாணிப்பதில் சம்பநதப்பட்டவர்கள் பின்னடிப்பதாகக் கூறப்படுகிறது.

இறுதியாக இருப்பது கோப்பாய் பகுதி. ஆனால் அங்கு சிறைச்சாலை கட்டத் தெரிவான இடம் மாவீரர் துயிலும் இல்லம். இதுவே பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது.

சிறைச்சாலையை மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைப்பதற்கு பல தரப்பட்டவர்களும் எதிர்ப்பு தெரிவித்துள்ள போதிலும் சிறைச்சாலையை வேறு இடத்தில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படாது இருப்பது சிறைச்சாலை மாவீரர் துயிலும் இல்லத்தில்தான் அமையப் போகின்றது என்ற சந்தேகத்தை வலுப் பெறச செய்கிறது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிறைச்சாலையை அமைப்பதால் பிரத்தியேக வசதிகள் எதுவும் கிட்டப்போவதில்லை என்பதே உண்மை.

இதேவேளை கடந்த 22ஆம் திகதி போராளிகளாலும், மாணவர்களாலும் மாவீரர் துயிலும் இல்லம் துப்புரவு செய்யப்பட்டபோது தமிழ் மக்கள் அழைப்பின்றியே திரளாகத் திரண்டு மாவீரர்களுக்கு ஈகச்சுடர் ஏற்றி வணங்கினர்.

இந்நிலையிலும் வேறு இடங்களில் சிறைச்சாலையைக் கட்டாமல் மாவீரா துயிலும் இல்லத்தில்தான் சிறைச்சாலைக் கூடம் அமைக்கப்படும் என சம்பந்தப்பட்டவர்கள் பிடிவாதம் பிடித்தால் அது மக்களின் எதிர்ப்புக்கு இலக்காகும் செயலாகும் என்று நம்பப்படுகிறது. அதையும் மீறி நடவடிக்கை தொடர்ந்தால் அங்கு கட்டப்படப்போவது சிறைக்கட்டடமாக இருக்காது.... என்று பொது மக்கள் மட்டுமன்றி காவலரும் கைதிகளும் கூட கூறிவருகின்றனர்.

☆

# வீதி விபத்துக்களில் இருவர் காயம்!

நேற்று யாழ்நகரில் இரு வேறு இடங்களில் நடைபெற்ற விபத்துக்களில் இருவர் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை கே.கே.எஸ். வீதி, சிவலிங்கப்புளியடிப் பகுதியில் இடம்பெற்ற வான் - சைக்கிள் விபத்தில் சைக்கிளில் சென்ற கந்தர்மடத்தைச் சேர்ந்த யாழ்.தபாலக ஊழியரான மௌனகுரு விஜயதெய்வேந்திரன் (வயது 47) படுகாயமடைந்தார்..

பரமேஸ்வராச் சந்திப் பகுதியில் இடம்பெற்ற மற்றொரு விபத்தில் யாழ். செங்குந்த இந்துக் கல்லூரி மாணவனான சந்திரசேகரம் பிரதீபன் (வயது 13) தலையிலும் வலது காலிலும் படுகாயமடைந்தார். இவர் தனது வீட்டிலிருந்த கடைக்குச் செல்வதற்காக வீதியைக் கடக்க முற்பட்ட வேளை மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

நேற்றுக்காலை யாழ்.நகரப் பகுதியில் இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவம் ஒன்றில் இருபாலையைச் சேர்ந்த தர்மராசா தேவரஞ்சன் (வயது 18) என்பவர் விலாப் பகுதியில் படுகாயமடைந்தார்.

அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ம-8-10)


## பிற்போடப்பட்டுள்ளது

கோவிற்புலம், தெல்லிப்பழை சிவன் ஆலய இந்து இளைஞர் மன்றத்தினரால் இன்று (31.03.2002) ஞாயிற்றுக்கிழமை அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த சீட்டிழுப்பானது எதிர்வரும் 18.05.2002ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்பதைச் சகலருக்கும் அறியத் தருகின்றோம்.

நிர்வாகத்தினர்,
சிவன் ஆலய இந்து இளைஞர் மன்றம்,
கோவிற்புலம் - தெல்லிப்பழை.

(2331)


## சிரமதானம்

யாழ்ப்பாணம்,மார்ச்31

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு மாபெரும் சிரமதானப் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இச்சிரமதானப் பணியில் மன்ற அங்கத்தவர்கள், கல்லூரியின் பழைய மாணவிகள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், அபிவிருத்தியில் ஆர்வமுள்ள நிறுவனத்தினர் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)

## சிறுவர் அரங்க விழா

வடக்கு - கிழக்கு மாகாண ஆரம்பக் கல்வி சிறார்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் விருத்தியை ஏற்படுத்தும் வகையிலும், சிறுவர்களின் ஆளுமையினை விருத்திசெய்யும் வகையிலும் சிறுவர் அரங்க விழாவை நடத்துவதற்கு மாகாணக் கல்வித் திணைக்கள ஆரம்பக் கல்விப் பிரிவு ஏற்பாடுகளை மேற்கொண்டுவருகிறது.

எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ள மாகாணத் தமிழ்த்தின விழாவுடன் இணைந்து இச்சிறுவர் அரங்க விழா நடத்தப்படவுள்ளது.

(ம-8)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி
### றோசம்மா (வண்ணமணி) அருளானந்தம்

உயரப்புலம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திருமதி றோசம்மா (வண்ணமணி) அருளானந்தம் நேற்று(30.03.2002) சனிக்கிழமை காலமானார்.

இவர் பறுனாந்து அருளானந்தத்தின் அன்பு மனைவியும் ஜோர்ஜ் சிதம்பரநாதன் (ஜேர்மனி), பேபி ருக்மணி, மேரி வசந்தா, மேரி வொப்சி (ஜேர்மனி), ஜோர்ஜ் சந்திரகுமார் (Electornic Engineer, நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும் இதயராணி (ஜேர்மனி), ஜெயானந்தன் (ஆசிரியர், யா/நவாலி மகா வித்தியாலயம்), ஆனந்தராஜா (முன்னாள் பொலீஸ் உத்தியோகதர்), அமிர்தராஜா (ஜேர்மனி), உமா (நியூசிலாந்து) ஆகியோரின் மாமியாரும் ஜிவிந், சிஜெத், தர்ஷி, கார்த்திகா, டிலான், நிஷான், றெக்ஷன், பொபிலா, பொபில்ராஜ், றொமிலா, ஸ்ரெபான், நிருபா, நிருஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (31.03.2002) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஆனைக்கோட்டை கத்தோலிக்க சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"இராஜமணிக் கொட்டேஜ்",*
*உயரப்புலம், ஆனைக்கோட்டை.*

தகவல்:
ப.அருளானந்தம் *(கணவர்).* (2329)

### திருமதி
### மயில்வாகனம் தெய்வானைப்பிள்ளை
*(பாக்கியம்)*

யாழ்ப்பாணம் மற்றும் உடுப்பிட்டி, இமையாணன் வீரகத்திப்பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்தவரும், தற்போது கொழும்பு, மொரட்டுவ சொய்சாபுர தொடர்மாடியில் வசித்து வந்தவருமாகிய திருமதி மயில்வாகனம் தெய்வானைப்பிள்ளை 27.03.2002 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் வேலும்மயிலும் - காலஞ்சென்ற செல்லாச்சி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்பு மனைவியும் கணேசமூர்த்தி **(Australia)**, **Dr.**சத்தியமூர்த்தி **(General Hospital, Colombo)**, விமலாதேவி **(London)**, சாந்தமூர்த்தி **(London)** ஆகியோரின் பாசமிகுதாயாரும் பவானி, ரோஹினி, சிறிதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் தங்கவேலாயுதம், பரமேஸ்வரி, சிவபாதசுந்தரம், புவனேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் வள்ளியம்மை, இராசநாயகம், தவதேவி, வீரவாகு ஆகியோரின் மைத்துனியும் ஆரணி, ஆர்த்தி, கிருஷாந், ஜனுஷந், அபிநயா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.591, காளி வீதி, கல்கிசையில் உள்ள மஹிந்த மலர்ச்சாலையில் இன்று (31.03.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

C-28 ,3/2, Soysapura Flats,
Moratuwa.
Tel.: 01 - 638519.

(C/21395)

தகவல்:-
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு ஆயுதங்களை பாகிஸ்தான் விற்க உள்ளதாம்

கொழும்பு,மார்ச்31

இலங்கை அரசுப்படைகளுக்கு பெருமளவு ஆயுதங்களை பாகிஸ்தான் விற்பனைசெய்ய இருக்கின்றது என்று இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தனது பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக பாகிஸ்தான் பெருமளவு ஆயுதங்களைத் தயாரித்து ஏற்றுமதிசெய்ய இருக்கின்றது. இந்த ஆயுத தயாரிப்புக்கான திறனை அது நன்றாக வளர்த்துக் கொண்டிருக்கிறது என்று முன்னணி பாதுகாப்புத் துறைச் சஞ்சிகையான "ஜேம்ஸ் டிபென்ஸ் வீக்லி" தெரிவித்திருக்கிறது.

அண்மைக்காலங்களில் பாகிஸ்தானின் முக்கிய ஆயுத ஏற்றுமதி நாடுகளாக ஸ்ரீலங்காவும், பங்களாதேஸும் இருந்தன என்றும் -

அந்தச் சஞ்சிகை சுட்டிக்காட்டியிருக்கிறது.

சிறிய ரக ஆயுதங்கள் 'அபெஸ்ரா 90வீ' ரக நீர்மூழ்கிக் கப்பல்கள், டாங்கிகள், கவச வாகனங்கள் போன்ற கனகர ஆயுதத் தளபாடங்கள் ஏவுகணைகள் ஆகியவற்றைத் தயாரித்து சில ஆபிரிக்க நாடுகளுக்கும், இலங்கைக்கும் பாகிஸ்தான் வழங்கவுள்ளதாக பாகிஸ்தானிய பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தனது ஆயுத விற்பனையை அபிவிருத்தி செய்வதற்காக 'டெபோ' (DEPO) எனப்படும் பாதுகாப்பு ஏற்றுமதி அபிவிருத்தி நிறுவனத்தை பாகிஸ்தானிய அரசு நிறுவியுள்ளது.

எகிப்து, குவைத், மலேசியா, சவூதி அரேபியா, சிரியா, துருக்கி மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய தனது வழக்கமான வாடிக்கையாளர்கள் தவிர்ந்த மேலும் புதிய நாடுகளை பாகிஸ்தானிடம் ஆயுதம் வாங்குவோர் பட்டியலில் இணைப்பதே 'டெபோ'வின் பிரதான நோக்கம் என்று கூறப்படுகிறது.

கடந்த 10ஆண்டுகளில் பாகிஸ்தானின் சராசரி ஆயுத விற்பனை 2கோடி அமெரிக்க டொலர்களாகும். இந்தத் தொகையை மேலும் அதிகரிக்கும் முயற்சியிலேயே பாகிஸ்தான் தற்போது ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

தனது இந்த முயற்சியில் வெற்றி பெற பாகிஸ்தானிய அரசு, குறைந்த மற்றும் நடுத்தர பொருளாதார வருமானம் உடைய நாடுகளை கவரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது. அத்துடன் ஜேர்மனியத் தயாரிப்புகளான ஹெக்லர் மற்றும் கோச் இயந்திரத் துப்பாக்கிகள் உட்பட சில பிற நாடுகளின் தயாரிப்புகளே கவர்ச்சிகரமான சிறிய அளவுகளில் உற்பத்திசெய்து ஏற்றுமதி செய்ய பாகிஸ்தான் ஆயுத தொழிற்சாலை திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. - இவ்வாறு அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.(ஒ-9)

# பாடுகளில் பங்குடையோருக்கு உயிர்ப்பிலும் பங்குண்டு

மிக நீண்டகாலமாக எமது மண்ணின் பாடுகள் மரணம் என்கின்ற வேதனைமிக்க நிகழ்வுகளில் நாமும் கலந்துகொண்டோம். எம்மண் எப்போது உயிர்க்கும்? எமது மக்கள் எப்போது உயிர் பெறுவார்கள்? எமக்கு எப்போது விடுதலை கிடைக்கும்? என்ற ஏக்க உணர்வுகளூடே வாழ்ந்து கொண்டு வந்துள்ளோம்.

யுத்தநிறுத்தம் - பேச்சுவார்த்தை - அமைதி நிலை - இயல்புவாழ்வு - சமாதானம் என்பதெல்லாம் கடந்த காலங்களில் எமக்கு மிகவும் தூரத்து நிலைகளாகவே தென்பட்டன. இடை யிடையே மெல்லிய ஒளிக்கீற்றுக்கள் தோன்றின என்பது உண்மைதான். இருந்தாலும் அவை தோன்றிய வேகத்திலேயே மறைந்து போனதும் உண்மையானது.


இவ்வாண்டு ஆண்டவர் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்கின்ற நிகழ்வுகளை சிந்திக்கின்றவேளையில் ஒரு நம்பிக்கையின் ஒளிக்கீற்று எம்மண்ணின்மேல் நிழலிட்டுள்ளது. ஏதோ ஒரு வகையில் அமைதியும் சமாதானமும் இந்தத் தடவை எம்மண்ணுக்குத் தோன்றும் என்ற நம்பிக்கை உணர்வு மிகத் தெளிவாகவே உள்ளது.

இந்த நம்பிக்கையின் ஒளிக்கீற்று கடந்தகால நிகழ்வுகளைப்போல் ஆசைகாட்டி மோசம் செய்யாமல் பேரொளியாய் மாறி நின்று நிலைக்கவும் நிலையான, நீடித்த அமைதியை நிரந்தரமாக எம் மண்ணிற்குக் கொண்டுவரவும் உயிர்த்த யேசுவிடம் வரம் வேண்டுவோம்.

### உயிர்ப்பில் உறவும் உரிமையும்

ஆண்டவர் இயேசுவின் பாடுகளோடும் மரணத்தோடும் பங்குகொண்டது போல் எமது மண்ணின் நீடித்த பாடுகளிலும் மரணங்களிலும் பங்குகொண்ட நாம் அவரின் உயிர்ப்பில் பங்கு கொள்ளத் தகுதி பெற்றவர்கள் என்பதால் எம்மண்ணின் உயிர்ப்பிலும் பங்குகொள்வோம்.

இன்று எம்மண்ணில் வாழ்கின்றவர்கள் எல்லோரும் ஏதோஒரு வகையில் யுத்தத்தையும் அதன் கோர விளைவுகளையும் அனுபவித்தும் - அவற்றின் வடுக்களை சுமந்துகொண்டும் இருக்கிறவர்களாகத்தான் இருக்கிறோம். புதைகுழிகளையும் மண்டையோடுகளையும் எலும்புக்கூடுகளையும் மட்டுமே எமது சொத்துக்கள் என்று சொல்லக்கூடிய நிலையில் தான் எமது தமிழ்ச் சமூகம் இருக்கிறது. போரின் அதிர்ச்சியினாலும் தாக்கத்தினாலும் உள அமைதியையும் மனநிலையையும் குழப்பி அதன் பின்னால் வருகின்ற அழிவையும் அதிர்ச்சியையும் இன்னும் பல ஆண்டு காலத்துக்கு சுமக்கப்போகின்றவர்களாகத்தான் எம்மில் அநேகர் இருக்கின்றார்கள். இன்றைய இளைய சமுதாயம் தம் இளமையான காலத்தில் பசுமையாக வைத்திருக்கவேண்டிய நினைவுகளில் பலவற்றை அழிவினதும் அதிர்ச்சியினதும் நினைவுகளாகவும் நிகழ்வுகளாகவும்தான் வைத்துக்கொள்ளப் போகிறார்கள்



என்பது துரதிர்ஷ்டவசமானது.

"உயிரோடு இருப்பவரை கல்லறையில் தேடுவதேன். அவர் இங்கே இல்லை. அவர் உயிருடன் எழுப்பப்

## இன்று ஈஸ்டர் திருநாள்

பட்டார்" (லூக். 24:5-6) என்கின்ற வார்த்தைகளின் ஆழ்ந்த அர்த்தங்களை எம் வாழ்வில் நாம் புரிந்துகொள்ளவேண்டும். அப்போதுதான் இறந்தவர் உயிர்த்து இன்றும் எம்மோடு வாழ்கின்றார் என்ற அந்த ஆழ்ந்த உண்மையை நம்முடைய தாக்கிக் கொள்ளுவோம். நாமும் உயிர்ப்பில் பங்குகொள்ளத் தகுதி பெறுவோம். எமது மண்ணும் மக்களும் உயிர்ப்பு நிலையில் வாழ்வு வாழத் தகுதி பெறுவார்கள்.

இயேசு இறந்து மூன்று நாள்களுக்குப் பின் தன் மனிதத் தன்மையோடும் இறைத்தன்மையோடும் வல்லமையோடு உயிர்பெற்று எழுந்தார். அவரது உயிர்ப்பில் இருள் ஒளி பெற்றது - பொய்மை மெய்மையானது - சாவு வாழ்வானது - அனைத்துமே புதிதானது - அனைத்துமே தெளிவானது. நம்பிக்கையின் ஆழ்ந்த அர்த்தங்களும் நீதியின் உண்மைத் தன்மையும் இறைத் தந்தையின் நீதியும் தெளிவானது.

இயேசுவின் உயிர்ப்பு அவர் வாழ்ந்த காலத்தில் அவர் வாழ்ந்த சமூகத்தில் மக்கள்மீது திணிக்கப்பட்ட அநியாய சட்டங்களையும் அடக்குமுறைவாதங்களையும் தூக்கியெறியும் ஒரு நிலையாகும். அவருக்கு வழங்கப்பட்ட அநியாயத் தீர்ப்பையும் துன்ப துயர அனுபவங்களையும் எதிர்க்கும் ஒரு நிலையாகும். உண்மையற்றவை நீதியற்றவை, அன்பற்றவை, அனைத்தும் அர்த்தமற்றவை என அவற்றை எதிர்க்கும் ஓர் நிலையாகும். அதுமட்டுமல்ல இனியும் நடக்கப்போகின்ற இவ்வாறான நிலைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஒரு தெளிவான முன்னுதாரணமாகும். உலகிலே திணிக்கப்படும் அநியாய சட்டங்கள், நடத்தப்படும் மனிதாபிமானமற்ற அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்படும் கொடூர செயல்கள் இவையனைத்தும் இந்த முன்னுதாரணத்தின் வழியில் எதிர்க்கப்பட வேண்டியவை; அழிக்கப்பட வேண்டியவை.

இந்தவகையில் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு நிலைக்க வேண்டிய உண்மையை எடுத்துக்காட்டுகின்றது. நிலைநாட்டப்பட வேண்டிய நீதியை எடுத்துக் கூறுகின்றது. அன்புறவிலும் புரிந்துணர்விலும் கட்டியெழுப்பப்படவேண்டிய சமுதாயத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. ஏழைகளும் வலுவற்றவர்களும் செல்வத்திலும் வல்லமையிலும் வாழ வழி காட்டுகிறது. சுருக்கமாகச் சொன்னால் இயேசுவின் உயிர்ப்பு உண்மையான நம்பிக்கையையும் முழுமையான எதிர்பார்ப்பையும் சாட்சியப்படுத்துகின்றது.

மற்றவர்களுக்காக தம் வாழ்வை அர்ப்பணிக்க விரும்புகின்றவர்களுக்கு ஒரு நல்லகாலம் உண்டு. உயிர்ப்பின் பின்னர் இயேசுவின் அடியில் அமைதியின் எதிர்காலத்தை அவர்கள் பெறுவர். உயிர்ப்பின் முழுமையை அவர்கள் அனுபவிப்பர்.

### அழிவு வேண்டாம்

இனியும் எம் மண்ணுக்கு பாடுகள் வேண்டாம். மரணங்கள் வேண்டாம். எம் மக்களுக்கு துன்பங்கள் வேண்டாம், துயரங்கள் வேண்டாம்.

**அருள்திரு. றூபன் மரியாம்பிள்ளை**

இனியும் எம் வாழ்வில் அடக்குமுறைகள் வேண்டாம், அடிமைத்தனங்கள் வேண்டாம். இனியும் எமது பாதைகளில் தடுப்புக் காவல்கள் வேண்டாம், திடீர் சோதனைகள் வேண்டாம். எமது வாழ்வின் பயணங்களை பயமின்றியும் - பதட்டமின்றியும் - துணிவோடும், மகிழ்வோடும் அமைக்கத் தக்க ஒரு புதிய பூமியே நமக்கு வேண்டும்.

மண்ணுக்கும் மக்களுக்கும் அர்ப்பணங்களைச் செய்வோர் ஏராளமானவர் இருக்க அவற்றை குழப்புவோரும் குலைப்போரும் இருக்கவே செய்கிறார்கள். அவர்கள் மனங்களிலும் இறை ஒளி வீசி நல்வழி காட்டப்படட்டும்.

தீவிரப் போக்குடைய கட்சிகளும் மதத் தலைவர்களும் இனியும் வெறும் கொள்கைகளுக்காகவும் வறட்டு கௌரவங்களுக்காகவும் அழிவையும் இறப்பையும் விடாமல் பிடித்துக்கொண்டிருக்க விரும்புகின்றனர். இவர்கள் மனங்களிலும் இறைஒளி வீசட்டும்.

எம் மண்ணில் தோன்றியுள்ள இந்த மெல்லிய ஒளிக்கீற்று நல்ல மனங்களிலும் தீய மனங்களிலும் நல்லவற்றைத் திருத்தி தீயவற்றை ஒழித்து பேரொளியாய் மாறி இலங்கையெங்கும் மக்கள் அனைவருக்கும் நிரந்தர ஒளியாகட்டும்.

# இன்று தந்தை செல்வாவின் 104ஆவது பிறந்தநாள்

## சமஅந்தஸ்தும் சமஷ்டியும்



சட்டத்துறையில் கியு.ஸி. பட்டம்பெற்ற தமிழர் தந்தை செல்வநாயகம் அவர்கள் அதற்கான கோல உடையில் எடுத்துக் கொண்ட அபூர்வமான படம்.

*(மயிலிட்டியில் நடந்த தமிழரசுக் கட்சிப் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய சொற்பொழிவு 27மார்ச்1956)*

கனேடிய அரசின் ஆங்கிலமும் பிரெஞ்சும் எவ்வாறு இடம்பெற்றுள்ளனவோ அதேமாதிரியாக இலங்கையில் தமிழ்பேசும் பிரதேசங்கள் அனைத்திலும் தமிழும், மத்திய அரசாங்கத்தில் சிங்களத்துடன், தமிழ் சமஅந்தஸ்துடன் அரசகருமமொழியாக விளங்க வேண்டும் என்பதே தமிழரசுக் கட்சியின் கொள்கையாகும். வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழும், மத்திய அரசாங்கத்தில் "சிங்களம் மட்டும்" அரசகருமமொழிகளாக்கப் பட்டுவிட்டால் நாங்கள் திருப்தியடைந்து விடுவோம் என்றும், இலங்கைக்கு ஒரு சமஷ்டி அரசியல் ஏற்படுவதுதான் எங்கள் கவலையேயன்றித் தமிழ்மொழிக்குச் சமஅந்தஸ்து கோருதல் அல்லவென்றும் கூறுவது ஒரு விஷமப் பிரசாரமாகும். சமஷ்டி அரசியலைப் போன்றே தமிழ்மொழியும் முக்கியமானதாகும். ஏனெனில் ஒரே அரசாங்கத்தின்கீழ் தமிழுக்குச் சமஅந்தஸ்து என்பது ஒருதலைப்பட்சமான முறையில் தான் போய்முடியும். அது தமிழர் நலனுக்குப் பெரும் தீங்கு விளைவிக்கும் என்பதைக் கடந்தகால அனுபவம் தெளிவாகக் காட்டியுள்ளது. கனடாவிலே ஆரம்பத்தில் ஒரே அரசாங்கம்தான் இருந்தது. ஆனால் பின்னர் பிரெஞ்சு மக்கள் கனடாவிலே சமஷ்டி அரசியல் ஏற்படுத்த வேண்டும்; பிரெஞ்சு மொழிக்கு ஆங்கிலமொழியுடன் சமஅந்தஸ்து அளிக்க வேண்டும் என்றுங்கோரினர். இடைவிடாத போராட்டத்தின் விளைவாக அவர்கள் கோரிக்கை வெற்றிபெற்றது.

தமிழ் பேசும் மக்களுக்குத் துரோகிகளாக விளங்கும் தனிநபரையோ, கட்சியையோ எதிர்ப்பதும், அவர்கள் சிங்களவர்களுடன் சேர்ந்து தமிழனின் நலனுக்கு தீங்கு விளைவிப்பதைத் தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்படுவதை எதிர்ப்பதும் நமது கட்சியின் நோக்கமாகும். இதற்கு அடுத்தபடியான நோக்கம் தமிழ்பேசும் மக்களின் எதிர்கால நலனில் கவனம்செலுத்தி, அவர்கள் நாட்டின் சுதந்திரப் பிரஜைகளாகத் திகழும்வகையில் அவர்களின் நலன்களைப் பாதுகாக்கக்கூடிய ஓர் அரசாங்கத்தைப் பெறுதல்.

## திரை விலகுகிறது

(யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு 24ஏப்ரல்1956)

திரு.பண்டாரநாயக்காவின் அமைச்சர் சபையில் தமிழர் அடியோடு ஒதுக்கப்பட்டுள்ளனர். தமிழர் அதையிட்டுக் குறைகூறக்காரணமில்லை. இப்போதுதான் இந்த நாட்டில் தமிழரின் உண்மையான நிலைமை வெளியாகியுள்ளது. இப்போதைய அரசியல் முறையில் சிங்களவர்கள் ஆளுபவராயும் தமிழர் ஆளப்படுபவராயும் உள்ளனர் என்பதை அது காட்டியுள்ளது.


விடுதலை என்பது கேட்டவுடன் கிடைப்பதன்று. கடும் போராட்டத்தின் பின்னரே அது கிடைப்பதாகும். நாடாளுமன்றத்தில் நமது ஆட்சேபனைகள் யாவும் பலன்தராது போகக்கூடும். அவ்விதமானால், மக்களும், அவர்களின் பிரதிநிதிகளும் சேர்ந்து நமது இலட்சியங்களைச் சாதிக்க ஓர் இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டிய தருணம் வந்துவிடும். ஆகவே தமிழ்பேசும் மக்களனைவரும் அடுத்துவரும் போராட்டத்திற்குத் தயாராக வேண்டுமென்றும் எந்தத் தியாகத்திற்கும் ஆயத்தம் செய்துகொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

## உயிர்ப் பிரச்சினை இது!

(கொழும்பு நகர மண்டபத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சிப் பொதுக்கூட்டத்தில் பேசியது 20மே1956)

இது ஒரு மொழிப் பிரச்சினை மட்டுமல்ல, கௌரவம், அந்தஸ்து, சுயமரியாதை பற்றிய ஒரு பிரச்சினையாகும். தமிழ் பேசும் மக்களின் மொழி இந்நாட்டின் அரசகரும மொழியாகாவிட்டால், அவர்கள் தமது மொழியில் அரசாங்கத்துடன் தொடர்புகொள்ள முடியாவிட்டால், தமது சொந்த இடங்களில் கூட பதிவுப்புத்தகங்களை வைத்துக்கொள்ளமுடியாவிட்டால் அவர்கள் இந்நாட்டிலே இறக்கமான ஒரு இனத்தவராகி முடிவில் அழிந்தொழிந்துவிடுவர்.

நாங்கள் சரணடையப்போவதில்லை. கடைசி வரை போராடுவோம். நமது மொழிக்கு சமஅந்தஸ்தும், நமக்கு சமத்துவமும் வேண்டும். நமது கோரிக்கை நீதியானதென்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். இதில் நாம் விட்டுக்கொடுத்தால் நாம் போராடத் தொடங்குமுன்னரே தோல்வியுற்றவராவோம்.



'சிங்கள ஸ்ரீ' எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்ற மறவர்கள் விடுதலையாகி வெளிவந்தபோது அவர்களை தந்தை செல்வா மாலை சூட்டி வரவேற்ற காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

LML (Select II) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.47, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (2241)

மயிலு வீதி, ஆறுகால் மடத்தில் 2 பரப்புக் காணி இரு வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு:- கி.கந்தசாமி, மயிலு வீதி, ஆறுகால் மடம். சனி பிற்பகல், ஞாயிறு முழு நேரமும் தொடர்புகொள்ளலாம். (2312)

CD-50 மோட்டார் சைக்கிளும், Lumala ஆண்கள் சைக்கிளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பெண்கள் இல்லம், அருளகம், மருதனார் மடம். (2316)

மல்லாகம் புகையிரத நிலையத்திற்கு அண்மையிலுள்ள வீடும், தெற்கு புன்னாலைக்கட்டுவன், மயிலங்காடு வீதியில் உள்ள கடையும் தோட்டமும், அதற்கு அருகிலுள்ள 20 பரப்பு தோட்டமும் விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு:- திரு.செல்லையா இராசதுரை, இந்துக் கல்லூரி வீதி, பண்டத்தரிப்பு. (C/21373)

குட்டி ஈனும் 2 வயதுடைய Dark Brown பொமனேரியன் பெண் நாயும, சணன் கலப்பின மறி ஆடும், 2 மாத முடைய சோடிக்குட்டிகளுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மனோன் மாஸ்ரர், அரசடி, நவாலி தெற்கு, மானிப்பாய். (2314)

ஏழாலை தெற்கில் 4 பரப்புக் காணியும் சகல வசதிகளும் கொண்ட வீடும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.அரியநாயகம் சட்டத்தரணி, ஏழாலை. (C/21348)

புதிய உழவு இயந்திரம் (135), மசல் கார் என்பன விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்புகொள்ளவும்: த.குமாரசாமி, 352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (2277)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (2120)

இறைச்சிக்கோழிகள் (Broiler) விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு தினங்களில் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு: 85, செம்மணி வீதி (கல்விக் கந்தோர் அருகில்), நல்லூர். (2286)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. கிலோ 160/=. தொடர்பு: பறஞ்சன், பொற்பதி றோட், கலைவாணி ஒழுங்கை, கொக்குவில கிழக்கு. (2169)

தரமான புறொயிலர், கல்பேட்ஸ் என்பன இலவசமாக சுத்தம் செய்து தேவையான அளவுகளில் பெற்றுக் கொள்ளலாம். கிலோவுக்கு 40/= குறைக்கப்பட்டுள்ளது. S.குமரன், 227, பிறவுண் வீதி (நரிக்குன்றுக்கு அருகில்), யாழ்ப்பாணம். (2293)

இறைச்சிக் கோழி (Broilers), கல்பேட்ஸ் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொளளலாம். இல.15,6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (1939)

இறைச்சிக்கோழி புறொயிலர், கல்பேட்ஸ் என்பன விற்பனைக்கு உண்டு. வேண்டிய அளவில் பெற்றுக்கொள்ளலாம். தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (2313)

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. ஒரு கிலோ 170/= மட்டும். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 38/10, மருதடி வீதி, யாழ்ப்பாணம். (2318)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் (1kg 150/=), கல்பேட்ஸ் (1kg 140/=), சேவல் (1kg 170/=), ஊர்க்கோழிகள (1kg 170/=) என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி, கட்டைப்பிராய். (2321)

## வகுப்புகள்

கணிதத்தில் சிறந்த பெறுபேறு அடைய வேண்டுமா? கணிதம் கற்பிப்பதில் 40 வருடங்களுக்கு மேல் அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் மிகக் குறுகிய காலத்தில் சிறந்த பெறுபேறுகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டு அடிப்படை அறிவிலிருந்து கற்பிக்கப்படும். O/L,10,9,8,7,6. இல.8, பிளச்சர்ஸ் ஒழுங்கை, சுண்டுக்குளி (மாணவர் வசதிக்கேற்ப நேரம் ஒதுக்கப்படும்). (C/21393)

## தேவை

எழுந்து நடமாட முடியாத ஒருவரைப் பராமரிப்பதற்கு ஒரு பணிப்பெண் தேவை. தொடர்பு: S.S.நாயகம், 'புனித இல்லம்', சோதி வேம்படி லேன், மானிப்பாய். (2297)

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நிகழுமா? வெளிநாடு போகலாமா? நோய் நீங்குமா? இன்னும் எதுவாயினும் கேட்டுப்பாருங்கள்: த.சிவானந்தன், ஆனந்தா சோதிடம், 264, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (2248)

## தவறிவிட்டது

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி என்னும் விலாசம் உடைய மாணிக்க சிங்கம் தேவநேசன் நிறோசன் என்பவரது தே.அ.அ. (இல.763191770V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்: பெண்கள் இல்லம், 'அருளகம்', மருதனார்மடம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (2315)


சுவைப்பிரியர்களே!
இதோ புதியதோர் அறிமுகம்!!
ஜீவ மிக்ஷர்
எமது தயாரிப்புக்களைக் கேட்டு வாங்குவீர்! சுவைத்து மகிழ்வீர்!!
Jeeva பகோடா
Jeeva கடலை
Jeeva கச்சான் பருப்பு
Jeeva கடலைப் பருப்பு
Jeeva மரவள்ளிப்பொரியல்
Jeeva காரசேவ்
Jeeva இனிப்புசேவ்
இன்னும் பற்பல.
உங்கள் நன்மை கருதி ஜீவ தயாரிப்புகள் 'பைக்கற்'றில் அடைத்தே விற்கப்படுகிறது.
PARA MASTER
கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி.
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில்.)
(C/21368)


# மாநகராட்சியின் ஆயுள்காலத்தை மேலும் நீடிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்31

யாழ்.மாநகரசபையின் பதவிக் காலத்தை மேலும் நீட்டிக்கவேண்டுமென யாழ்.மாநகரசபை உறுப்பினர்களால் உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்படவுள்ளதாக மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

சபை உறுப்பினர்களிடையேயான கலந்துரையாடலின் பின்னர் இது தொடர்பான தீர்மானம் ஒன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

தற்போதைய யாழ்.மாநகரசபையின் பதவிக்காலம் எதிர்வரும் ஏப்ரல 14ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

இதேசமயம், நடைபெறவிருந்த உள்ளூராட்சித் தேர்தலும் செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதிவரை பிற்போடப்பட்டிருப்பதனால் அது வரைக்கும் தற்போதைய சபையின் பதவிக் காலத்தை மேலும் நீடிக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே ஜனவரி மாதம் 11ஆம் திகதியுடன் பதவிக்காலத்தை நிறைவு செய்திருந்த யாழ்.மாநகர சபை உட்பட யாழ்.மாவட்டத்தின் உள்ளூராட்சிச் சபைகள் அனைத்தினதும் பதவிக்காலம் ஏப்ரல் மாதம் 14ஆம் திகதிவரை நீட்டிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை கட்டட அடிக்கல் நடும் விழா

யாழ்ப்பாணம்,மார்ச்31

வல்வெட்டி - விநாயகர் வித்தியாலய புதிய கட்டடத்திற்கான அடிகல் நடும் விழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் சி.சிவச்செல்வம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் அடிக்கல்லை வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் நட்டுவைப்பார். (க-9)

## சுன்னாகம் பல நோ.கூ.சங்கம் (வ-து) சுன்னாகம்

### அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் இரண்டு சில்லு உழவு இயந்திரத்தின் டில்லர் கலப்பை கேள்விப் பத்திரம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் சங்க வேலை நாள்களில் தலைமை அலுவலகத்தில் டில்லரைப் பார்வையிட்டு, கேள்விப்பத்திரங்களைப் பெற்று எதிர்வரும் 09.04.2002ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சுன்னாகம் பல நோ.கூ.சங்கம்,
சுன்னாகம்.
29.03.2002

- பொது முகாமையாளர்.

(C/21389)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 1948 - 08 - 30

ஆண்டவன் அடியில் 2001 - 04 - 10

## அமரர் கந்தையா செல்வநாயகம்

(இ.மி.ச.சுன்னாகம்)

திதி: 31.03.2002

ஆண்டு ஒன்று ஆனதுவே இன்னும்
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சை
விட்டு நீங்காது நிறைந்திருக்கும்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மகள், மருமகன், பேரப்பிள்ளைகள், தாய், சகோதரர்கள், உற்றார், உறவினர்.

கடவைப்புலம்,
சுன்னாகம். (2281)

# விழிநீர் சொரியும் கண்ணீர்க் காணிக்கை



## திருமதி பாலசிங்கம் சிவபாக்கியம்

கொழும்புத்துறை மேற்கு, வதரிபீட விநாயகர் ஆலய அறங்காவலர் சபைச் செயலாளரும், இந்து இளைஞர் மன்ற உறுப்பினரும், எமது பிரதேச உதயன் செய்தியாளருமான திரு.பா.நந்தகுமார் அவர்களின் அன்புத் தாயார் திருமதி பாலசிங்கம் சிவபாக்கியம் அவர்களது மறைவினால் துயருற்று நிற்கும் அன்னாருக்கும், அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அமரருக்குக் கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

ஆத்மா சாந்தியடைவதாக.

கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர்
ஆலய அறங்காவலர் சபையும்,
இந்து இளைஞர் மன்றமும். (2322)

கொழும்புத்துறை.

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 03 - 10 - 1941

விண்ணில் 31 - 03 - 1997

## அமரர் இ.கிறிஸ்தோப்பர் (பொபி)

(பொபி ஸ்ருடியோ உரிமையாளர் - யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு)


"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

93, ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம். (2320)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ!

# நெஞ்சினின்றகலா ஓராண்டு நினைவலைகள்



## அமரர் சந்திரன் ஜெயச்சந்திரன் (ராயு)

அன்னை மடியில் 1969-03-17

ஆண்டவன் அடியில் 2001-03-31

அன்பான எம் அண்ணா ஊர் போற்ற வாழ்ந்தீரே!
ஆசையான உங்கள் முகம் எம்கண்ணில் தெரியுதண்ணா
அண்ணா நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும்
எம் மனதை விட்டு அழியாது உங்கள் நினைவு.
வானத்துச் சந்திரனாய் ஒளி வீசும் விண்மீனாய்
எம்முடன் வலம் வந்தவரே!
வையத்துள் வாழ்ந்தது போதுமென - ஒருவருக்கும்
சொல்லாமல் எம்மை விட்டுச் சென்றதென்ன?
எம் வாழ்வின் ஏற்றங்கள் இறக்கங்கள்
அனைத்திலும் அகமகிழ்வுடன் இணைந்தவரே!
நீங்கள் வருவதால் எங்கள் கருமங்கள்
அத்தனையும் பொலிவு பெறும்
உங்கள் கள்ளங் கபடமற்ற சிரிப்பும் பேச்சும்
எம்மை விட்டு நீங்கியதேனோ?
உங்கள் நினைவால் நாம் வாடாமல் வாடுகின்றோம்
மீண்டும் இவ் வையத்துள் வந்து ஆறுதல் தருவீர்களா - எமக்கு.
உலகமறியாத எம்மையெல்லாம் வழி நடத்திச் சென்றவரே!
இன்றும் உங்கள் நினைவால் எம் விழிகளில் இருந்து
கண்ணீர் அருவியாய் வழிகின்றனவே.

உங்கள் பிரிவால் துயருறும்:
தாய், மனைவி,
பிள்ளைகள், தம்பிமார், தங்கைமார்,
உற்றார், உறவினர்கள்,

381,Kasthuriyar Rd.
Jaffna. (2317)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில்
# வியாகுல அன்னையின் ஹெபி புதிய வடிவில் மெருகூட்டப்பட்டது

குருநகர்,மார்ச்31

குருநகர் புனித யாகப்பர் ஆலய வளவில் அமைந்துள்ள வியாகுல அன்னையின் ஹெபி புனரமைப்புச் செய்யப்பட்டு குருநகர் பங்குத் தந்தை வணபிதா அ.பி.ஜெயசேகரம் அடிகளாரால் திறந்துவைக்கப்பட்டது.

1985இல் உருவாக்கப்பட்ட இக்கெபி சிதைவடைந்த நிலையில் காணப்பட்டது. குருநகர் பகுதி மக்களிடம் திரட்டப்பட்ட நிதி மூலம் இக்ஹெபி நவீனவடிவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

குருநகர் புனித யாகப்பர் ஆலய வளவின் மேற்கு மூலையில் இக்ஹெபி அமைந்துள்ளது. இறந்த யேசு வின் உடலை சிலுவையில் இருந்து இறக்கிய பின்னர் வியாகுல அன்னை அவரது உடலை தமது மடியில் வைத்து சோகமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் கல்லறைக் காட்சி அழகாக இங்கு சித்திரிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்குப் பின்புறத்தில் அமைக்கப்பட்டுள்ள சுவரில் சிலுவையும், திரண்ட மேகங்களும் புனித யாகப்பரின் ஆலயமும் வரையப்பட்டுள்ளன. (ஐ-51)


# அறிவித்தல்

முன்னர் சாவகச்சேரி நகர்ப் பகுதியில்
இயங்கிவந்த

**அருள் விநாயகர் மோட்டோர்ஸ்**

என்னும் எமது ஸ்தாபனம் மீண்டும் 27.03.2002 தொடக்கம் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் இயங்குகின்றது என்பதை எமது தென்மராட்சி நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

எம்மிடம் மோட்டார் சைக்கிள்கள்,
மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள்,
பற்றறி வகைகள்,
மோட்டார் வாகன வயறிங் பொருள்கள்,
துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள்
என்பவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

**அருள் விநாயகர் மோட்டோர்ஸ்**
262,கண்டி வீதி, சாவகச்சேரி. (2340)


# முதலாவது வருட நினைவஞ்சலி



மலர்வு 23 . 01 . 1954

உதிர்வு 10 . 04 . 2001

**திருமதி செல்வராணி (குஞ்சு) மும்மூர்த்தி**

**திதி:பூர்வபக்க திருதியை 31.03.2002**

ஆண்டொன்று சென்றாலும் ஆறவில்லை எமது நெஞ்சம்
மீண்டும் உங்கள் உருவத்தை மேதினியில் எப்போது காண்போம்?
எங்களை விட்டுப் பிரிந்த ஆருயிரே குஞ்சுவே! உங்கள்
மாண்புமிகு கணவர், மகள், அம்மா, மாமா, மாமி, சகோதரர்களுக்கு
கண்ணியமுடைய குஞ்சுவே! ஒரு வார்த்தை கூற ஓடோடி வாராயோ?

ஓம் சாந்தி!

உன் பிரிவால் துயருறும்:
கணவர்: அ.மும்மூர்த்தி,
மகள்: மு.கௌசிகா.

*7ஆம் கட்டை,*
*சண்டிலிப்பாய்.* (2339)

## சிறப்பு மலருக்கு ஆக்கங்கள்

வடமராட்சி கிழக்கு,மார்ச்31

வடக்கு - கிழக்கு மாகாண தமிழ் மொழித்தின விழாவில் வெளியிடப்பட விருக்கும் 'கவின் தமிழ்' சிறப்பு மலருக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

அறிஞர்கள், எழுத்தாளர்களிடமிருந்து ஆய்வுக்கட்டுரைகள், வடக்கு - கிழக்கின் வரலாறு, பாரம்பரியம் என்பவற்றினைப் பிரதிபலிக்கும் கட்டுரைகள், துணுக்குகள், கவிதைகள், வடக்கு - கிழக்கு மண்வாசனையை வெளிக்காட்டும் சிறுகதைகள், குறுநாடகங்கள் ஆகிய ஆக்கங்களை மாகாண கல்வி அமைச்சு கோரியுள்ளது.

(ஐ-182)

## இந்தியாவிலிருந்து விக்கிரகங்கள்

கொழும்பு,மார்ச்31

மாந்தை திருக்கேதீஸ்வரர் ஆலயத்திற்கு தமிழகத்திலிருந்து தருவிக்கப்படவிருந்த நான்கு விக்கிரகங்களில் மூன்று இங்கு எடுத்துவரப்பட்டுள்ளன. மற்றொரு விக்கிரகமும் வந்து சேர்ந்தவுடன் விக்கிரக பிரதிஷ்டை செய்யப்படவுள்ளதாக ஆலய திருப்பணிச்சபை தெரிவித்துள்ளது.

(ஐ-13)


**விக்னா** கல்வி நிறுவனம்
பிரிவு II
**O/L Day Class**
8.30-2.00
ஆரம்ப விவரம்
*நாளைய உதயனில்*
*இதே இடத்தில்.* (2334)

**லஷ்சுமி** இணுவில்
04.04.2002 வரை
பிரபுதேவா, ரோஜா
**நிலாக்காலம்**
(ரீல்ஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, (ப.நே.) (2342)

**நாகம்ஸ்** சுன்னாகம்
பிரசாந்த், ஜோதிகா,
ரகுவரன், மணிவண்ணன்
நடித்த
**ஸ்டார்**
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00 (புதியநேரம்) (2332)

**ராஜா** யாழ்ப்பாணம்
பார்த்தீபன், நந்திதாதாஸ்,
தேவயாணி நடித்த
**அழகி**
சனி, ஞாயிறு
10.30, 2.30, 5.00
தினசரி: 10.30, 2.30 (C/21126)

**நிறைஞ்சனாஸ்**
சங்கானை
இன்று மட்டும்
சூப்பர் ஸ்ரார் ரஜனி, மீனா,
நெப்போலியன், கவுண்டமணி,
செந்தில் நடித்த
**எஜமான்**
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.) (C-21127)


## குப்பி விளக்கினால் எரிகாயம்

குப்பி விளக்குடன் புத்தகத்தை எடுக்க முற்பட்ட சிறுவனின் கையில் இருந்த விளக்கு தவறி விழுந்ததில் நித்திரையில் இருந்த அவனது சகோதரி எரிகாயங்களுக்கு இலக்காகினார்.

கடந்த 23ஆம் திகதி வரணி, கரம்பைக் குறிச்சியில் நடந்த இச்சம்பவத்தில் காயமடைந்த மயில்வாகனம் கார்த்திகா (வயது-11)என்ற சிறுமி மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக நேற்று யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.(ஐ-6)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!

# ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில் 03 . 06 . 1921

விண்ணில் 10 . 04 . 2001

**திருமதி தங்கராசா செல்வரத்தினம்**

**திதி:31.03.2002**

பாசத்தின் இருப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
இன்சொல்லும் ஏற்றமுறுஞ் செயலும் - எவர்க்கும்
உதவும் இளகிய நெஞ்சம் கொண்ட அன்னையே!
எம்மைப் பிரிந்து சென்று ஓராண்டு ஆகிறது.

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம்துயரம்!
மீண்டுமொரு பிறப்புண்டேல் உறவுகளாய்ச் சந்திக்க
ஏங்குகிறது எம் இதயம்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி சாந்தி!! சாந்தி!!!

*அம்பிகாவத்தை வீதி,*
*சங்கானை.*

*மாறாத அன்புடன்:* பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள். (2341)

# மரண அறிவித்தல்கள்

## கைலாயபிள்ளை அருட்சிவம்

வேலணை மேற்கு, வேலணையைச் சேர்ந்த கைலாயபிள்ளை அருட்சிவம் 29.03.2002 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் கைலாயபிள்ளை தம்பதிகளின் மகனும் சபாரெத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவகுமார், செல்வகுமார், கிருஷ்ணகுமார், உதயகுமார், நந்தகுமார், கலைச்செல்வி, யோகராணி ஆகியோரின் தகப்பனாரும் இராசஇலட்சுமி, தேவிகா, நந்தினிதேவி, பிரதீபன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான ஞானசிவம், பரமசிவம், நல்லையா, மகேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, இராஜலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் கனகசபாபதி - இராசு, மாணிக்கவாசகர், மகாலட்சுமி, இராஜேஸ்வரி, யோகேஸ்வரி, நல்லைநாதன் ஆகியோரின் மைத்துனரும் சிவரஞ்சினி, வானதி, சிந்துஜா, சிவாஜினி, கஜந்தினி, ரசிகா, சர்மினி, டர்சிகா, திலக்சன், நிலக்ஷன் ஜீவராஜ், சசிராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2002) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அம்பலவி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வேலணை மேற்கு,*
*வேலணை.* (2338)

தகவல்:
உதயகுமார் (மகன்)

## செல்லையா சோமசுந்தரம்

காரைநகர், தங்கோடையைச் (குமிளங்குளி) சேர்ந்த செல்லையா சோமசுந்தரம் நேற்று (30.03.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் செல்லையா - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகனும் சிவசிதம்பரம் - மீனாட்சி தம்பதிகளின் மருமகனும் சிவமணியின் அன்புக் கணவரும் சுரேஸ்குமார் (மக்கள் வங்கி, காங்கேசன்துறை), ரமேஸ்குமார் (தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்), சசிகலா, சத்தியகலா, சிவகலா ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவலிங்கம் (நுவரெலியா), சிவகலை (பண்டாரவளை) ஆகியோரின் மைத்துனரும் சண்முகலிங்கம் (பண்டாரவளை), பாக்கியம் (மலேசியா), ருக்குமணி, தவமணி, காலஞ்சென்ற சோதிப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.04.2002) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தங்கோடை,*
*காரைநகர்.* (2337)

தகவல்:
மனைவி: சோ.சிவமணி, பிள்ளைகள்

## திருமதி சின்னம்மா நாகநாதர்

தாமன்தோட்டம், அல்வாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா நாகநாதர் அவர்கள் 29.03.2002 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதரின் அன்பு மனைவியும், சிவலிங்கம், பிறைசூடி, சுந்தரலிங்கம், கனகலிங்கம், காலஞ்சென்ற சோதிலிங்கம், மகாலிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் இராஜேஸ்வரி, விஜயலட்சுமி, யோகேஸ்வரி, சரோஜினி, யோகலட்சுமி, வதனேஸ்வரி, காமினி ஆகியோரின் மாமியாரும், மாலதி, உமாதேவி, பூங்கோதை, தயாபரன், அமலன், சுகந்தினி, தயாளினி, ராம்குமார், மாலினி,நரேஸ்குமார், சோபனா, திகேந்தன், கேதாரகௌரி, நந்தினி, சகிலன், கிருஷ்ணகுமார், கிருஷ்ணலீலா, கிருஷ்ணரூபன், கிருஷ்ணவேணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நந்தகுமார், பாலேந்திரராஜா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ரஜீவன், கிருத்திகா, கபிலன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலிக்காகப் பூதவுடல் பொறளை மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகளுக்காக இன்று (31.03.2002) ஞாயிற்றுக்கிழமை கனத்தை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செட்டிச்சோலை,*
*அளவெட்டி வடக்கு.*

தகவல்:
திருமதி இரா.சிவலிங்கம் (மருமகள்) (2343)


பிறக்கவிருக்கும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

**ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**

ஸ்தாபனத்தாரின்

**அதிரடி மலிவு விற்பனை** 01.04.2002 முதல் 13.04.2002 வரை

**நல்ல ரகமான நல்ல தரமான சாறி வகைகள்:**

| | | | |
|---|---|---|---|
| பான்சி (BANSI) | ~~950~~ | - | 850 |
| சாஜகான் | ~~1100~~ | - | 950 |
| ராஜேஷ் சில்க் | ~~1000~~ | - | 850 |
| அபூர்வ சில்க் | ~~950~~ | - | 850 |
| தூஷன்தி | ~~1100~~ | - | 900 |
| பேர்ள் (Pearl) | ~~900~~ | - | 700 |
| பூரி சில்க் | ~~950~~ | - | 800 |

**நவீன பாணியிலமைந்த பஞ்சாபி வகைகள்:**

| | | | |
|---|---|---|---|
| லேஸ் பஞ்சாபி | ~~1300~~ | - | 1200 |
| கொட்டன் (Cotton) பஞ்சாபி | ~~950~~ | - | 750 |

அத்துடன் ஸ்கேர்ட், பிளவுஸ், சேட் வகைகள் அனைத்தும் மலிவான விலையில் கிடைக்கும்.

**ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**

இணை நிறுவனம்: **யோகாஸ் ஆடையகம்.**

18A, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

வாகனம் வாடகைக்கு உண்டு
முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளலாம்.
கொழும்பு - யாழ்ப்பாணம் - கிளிநொச்சி (C-21401)

*யோகாஸ் ஆடையகம்,*
*அராலி மேற்கு, வட்டுக்கோட்டை.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலசிங்கத்தின் வன்னி வருகை சமாதான முயற்சிகளுக்கு உந்துசக்தி

## 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' பத்திரிகை கருத்து

கொழும்பு,மார்ச்31

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் வன்னிப் பகுதிக்கு விஜயம் செய்துள்ளமை சமாதான முயற்சிக்கு ஓர் உந்துசக்தியாக அமைந்துள்ளது.

இவ்வாறு 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' பத்திரிகை கருத்துத் தெரிவித்துளளது.

நேற்று வெளியான அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்திலேயே இந்தக் கருத்து தெரிவிக்கப் பட்டுள்ளது.

அன்ரன் பாலசிங்கத்தின் வன்னி விஜயம் நாட்டில் பல வருடங்களாக நீடித்த யுத்தத்திற்குத் தீர்வுகாண முற்படும் சமாதான முயற்சிகளில் ஒரு முக்கிய அம்சமாகத் திகழ்கிறது.

மே மாதம் முதற்பகுதியில் விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சுக்கள் நடைபெறும் என்று அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில் அன்ரன் பாலசிங்கத்தின் இந்த விஜயம் முக்கியத்துவம் பெறுகிறது. இலங்கையில் சமாதானத்தை உருவாக்குவதற்கான ஆக்கபூர்வமான பணிகள் நடை பெற்றுவருகின்றன - என்று அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6-9)

MICRO PC SYSTEMS - MICRO PC SYSTEMS - MICRO PC SYSTEMS
COMPUTER SERVICE
Computer Repairs
Computer Service
Computer Maintenance
உங்கள் Computer இல் ஏதும் பிழைகள் இருப்பின் எங்களை அழையுங்கள்
MICRO PC SYSTEMS
No.9, Modern Market, Hospital Road, Jaffna.
Tel:021-2067
www.mipaq.com
(C/21394)
MICRO PC SYSTEMS - MICRO PC SYSTEMS - MICRO PC SYSTEMS

BIT
Bachelor of Information Technology
(External Degree)
University of Colombo
கல்வியாண்டு 2002/2003
கொழும்பு பல்கலைக்கழக ICT நிறுவனத்தால் நடத்தப்படும் மேற்கண்ட பட்டப்படிப்பிற்குரிய தேர்வுப்பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை இன்று (31-03-2002, ஞாயிற்றுக்கிழமை) முதல் IBMS தலைமைக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
மேலதிக விபரங்களிற்கு............ Director(Ad.)
T.P.:021-3165 IBMS
Email: ibms@sltnet.lk 701,K.K.S.Road,
31/03/2002 Jaffna

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்
யாழ்ப்பாணம்
சேவை நலன் பாராட்டு



திரு.கந்தையா சிவலிங்கம்
(உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர், காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை, இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்)
எமது கூட்டுத்தாபனத்தில் 37 வருடங்கள் சிறப்புறப் பணியாற்றி நாளை (01.04.2002) திங்கட்கிழமைமுதல் தமது சேவையிலிருந்து ஓய்வுபெறும்
உயர்திரு.கந்தையா சிவலிங்கம் அவர்களை அவரது ஓய்வுகாலத்திலும் சகல வளங்களுடன் சீருஞ்சிறப்புமாகப் பல்லாண்டு காலம் நலமே வாழ்க என வாழ்த்துகின்றோம்.
இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம், 65, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
பொறுப்பதிகாரியும், ஊழியர்களும்.
(சி-21369)

### போராளிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில், அக்கரைப்பற்று, பொத்துவில் பிரதேச செயலர் பிரிவுகளில் சமாதான சூழ்நிலைக்கு மத்தியிலும் விசேட அதிரடிப்படையினர் வழமையான சுற்றிவளைப்பு, தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர். இந்தத் தேடுதல் நடவடிக்கைகளின்போது கைது செய்தல், தடுத்து வைத்தல், தாக்குதல் போன்ற கெடுபிடிகளும் இடம்பெறுகின்றன.

இதனால் பொதுமக்கள் மத்தியில் அச்சமும் பதற்றமும் ஏற்பட்டுள்ளது. எனவே இதுகுறித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு அவர் பாதுகாப்பு அமைச்சரிடம் கேட்டுள்ளார். (ஐ-6)

### புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூழ்நிலையை உருவாக்குவதற்கு தமது அமைப்பு மீதான தடை நீக்கப்படுவது அவசியம் என்று புலிகள் தொடர்ந்து வலியுறுத்திவருகின்றனர்.

கடந்த வாரம் வன்னியில் தம்மைச் சந்தித்துப் பேசிய நோர்வே சமாதானக் குழுவினரிடம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் இது விடயம் குறித்து வலியுறுத்தியதாகவும் கூறப்படுகிறது. தலைவர் பிரபாகரனின் இந்த வற்புறுத்தல் பற்றி நோர்வே சமாதானக் குழு அரசுத் தரப்பிடம் எடுத்துக் கூறியிருப்பதாக அறியவந்தது.

சமாதானப் பேச்சுக்களுக்காக புலிகள் அமைப்பு மீதான தடையை நீக்குவது பற்றி அரசு சாதகமாகப் பரிசீலிக்கும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த ஜனவரி 22 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய கொள்கை விளக்க உரையில் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

SUBRA (14)
சித்தன்கேணி
2004 A/L
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள்
ஆரம்பம்: 04.04.2002
காலை 6.00
(C/21374)

### வானொலியில் விசேட நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,மார்ச்31

யாழ் மறைமாவட்ட சமூக தொடர்பு ஆணைக்குழுவின் அனுசரணையுடன் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி மாணவர்கள் தயாரித்த 'உயிர்ப்பில் தணியும் புயல்' என்னும் நிகழ்ச்சி இன்று இரவு 9.45 மணிக்கு இலங்கை வானொலியின் யாழ். சேவையில் ஒலிபரப்பப்படவிருக்கின்றது. (ஐ-3)

### ஸ்ரீலங்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளப்படாவிட்டால் ஐக்கிய தேசிய முன்னணி அரசில் இனியும் இணைந்து இருப்பதா என்பதைத் தீர்மானிக்கும் வேளை விரைவில் வந்துவிடும் என்று ஹக்கீம் கூறியிருப்பதாக சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. (ஐ-6-9)

### தமிழ்க் கைதி உண்ணாவிரதம் இருக்கமுடிவு

பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதி ஒருவர் எதிர்வரும் 10ஆம் திகதியில் இருந்து சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளார்.

கடந்த 2000ஆம் ஆண்டு மே மாதம் கைதுசெய்யப்பட்ட கதிவேலு சோதிநாதர் என்பவரே உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளார். (ஐ-6-9)

### முஸ்லிம்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்களின் நேரடிக் கவனத்துக்கு கொண்டு வரமுடியும் என்றும் கரிகாலன் சுட்டிக்காட்டினார்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணபிள்ளையும் இச்சந்திப்பில் கலந்துகொண்டார். (ஐ-6-9)

கட்டட நிர்மாணப் பொறியியலாளர்
(CIVIL ENGINEER),
கட்டட வரைபடக் கலைஞர்
(ARCHITECT)
தேவை
கொழும்பிலுள்ள பிரபலமான கம்பனி ஒன்றிற்குச் சொந்தமான யாழ்.குடாநாட்டிலுள்ள கட்டடங்களைப் புனர்நிர்மாணம் செய்யவும் ஏனைய கட்டட வேலைகளிற்கும் தகுதியும் அனுபவமும் வாய்ந்த கட்டட நிர்மாணப் பொறியியலாளரும், கட்டட வரைபடக் கலைஞரும் உடன் தேவைப்படுகின்றனர். தகுதியுடையவர்கள் கீழ்க்காணும் பக்ஸ் இலக்கத்திற்கு அல்லது ஈ-மெயில் இலக்கத்திற்கு உடன் விண்ணப்பிக்கவும்.
Fax No.:- 698442
e-mail:- penpal@eureka.lk
(C/21336)

DXN
☆நோயை நெருங்க விடாது விரட்ட....
☆நோயைத் தடுக்க....
☆நோய்வாய்ப்பட்ட உறுப்புகளினதும் தசைநார்களினதும் சக்தியைத் திரும்பப் பெற்று வலுப்படுத்த....
☆இளமையாகத் தோற்ற....
☆நோயற்ற வாழ்வு வாழ....
மூலிகை உப உணவு!
மூலிகை அரசன் (King Of Herbs) என வர்ணிக்கப்படும் கனடேமா (Ganoderma) என்ற காளானை உபயோகித்து மலேசியாவில் தயாரிக்கப்பட்ட மாத்திரைகள் (Capsules) விற்பனைக்கு வந்துள்ளது.
இந்தியா உட்பட 18 நாடுகளில் இந்த மருந்தைப் பயன்படுத்தியோரின் வெற்றிநடை அதன் சிறப்பையும் தகுதியையும் நிரூபிக்கின்றது.
இக்காளானை உபயோகித்துத் தயாரிக்கப்பட்ட மாத்திரைகள், கோப்பி, பற்பசை முதலியன மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் ஆலயத் திருவிழாக் காலத்தில் ஆலய சுற்றாடலில் அமைக்கப்பட்டிருக்கும் விற்பனை நிலையத்தில் கடந்த 29.03.2002 முதல் 15.04.2002 வரை அறிமுகப்படுத்தி விற்பனை செய்யப்படுகின்றது.
வந்து, பார்த்து, கேட்டு வேண்டி, பயன்படுத்தி நல்லாரோக்கிய வாழ்வு பெற அழைக்கின்றோம்.
Magnum Investments (PVT) Ltd.,
No.15, Stamboul Place,
Colombo - 03.
Tel.:575753, 074 - 723396.
(C-21212)



இன்று
முதலாம் ஆண்டு நிறைவு விழா
31.03.2002
குறுகிய நாள்களில், எண்ணிக்கையற்ற வாடிக்கையாளர்களைத் தன்னகத்தே இணைத்துக் கொண்ட பாலன்ஸ் மல்ரி சென்ரர் தனது முதலாவது வருடத்தைப் பூர்த்திசெய்து இன்று இரண்டாம் ஆண்டில் காலடி எடுத்துவைக்கின்றது என்பதை வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
COMPUTER SERVICE
☆ Internet ☆ Type Setting ☆ Recording - Spot பழைய புதிய பாடல்களை தரமாக CDஇல் இருந்து CDக்கும், CDஇல் இருந்து கசெற்றுக்கும் பதிவுசெய்துகொள்ளவும்
COMMUNICATION CENTER
Telephone: உள்நாட்டு, வெளிநாட்டு அழைப்புக்களை குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளவும்
❖ Fax ❖ Photo Copy ❖ Laminating முதலியவற்றுக்கும் இன்றே நாடுங்கள்.
பாலன்ஸ் மல்ரி சென்ரர்
இல.71, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
T.P.:021-3248, Fax:-021-3248, e- mail:palans@yahoo.com
(C-21361)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 36[illegible]ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.03.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org